ஏப்ரல் 2010

ஆசிரியர்: ஷோபா

# காற்றுவெளி

நினைத்தபோது வெளிவரும் இதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடந்தை கீதப்பிரியன்

எழுதிய



## விதைகளே விழுதுகள்

கட்டுரைகளின் தொகுப்பு

## பொன் மலர் கதைகள்

சின்ன சின்ன கதைகள்
பிரபல ஓவியர்களின் படங்கள்!

## வானத்து வார்ப்புகள்

வானொலி நாடக நூல் (பரிசு பெற்றது)

## அகதியின் முகவரி

சிறுகதை தொகுப்பு

## நாடு தேடும் கதைகள்

சிறுவர்களுக்கு நீதி சொல்லும் கதைகள்

## நடந்து வரும் நதிகள்

கவிதை நூல்



விற்பனையாளர்
gitapriyan@yahoo.com
சுஜாதா தேவி, 9 L(South) ஐந்தாவது தெரு,
கோவிந்தன் நகர், பாலவாக்கம், சென்னை-41
போன்: 24480781, 9884354448

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றுவெளி

(நினைத்த போது வெளிவரும் இதழ்)

ஆசிரியர்: ஷோபா

**தொகுப்பாளர்:**
திருமதி.ஜெயந்தி சங்கர்
(சிங்கப்பூர்)

**கணினியிடலும்,அச்சிடலும்:**
**Yakkai Designs**
சென்னை-5


தமிழக தொடர்புக்கு:
gitapriyan@yahoo.com

நூல் விமர்சனத்திற்கு இரண்டு பிரதி நூல்களை அனுப்புதல் வேண்டும்.

படைப்புக்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பு.

சந்தாதாரர் மற்றும் ஆக்கங்களின் தொடர்புக்கு:

**இ.மகேந்திரன்.**
Redriffe Road,
Plaistow,
London.
E13 0 JX




MANN (ERDE) M...
V. Sivarajah
Am Windhövel ...
47249 Duisburg
Germany

மீண்டும்-

புதிய ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிற சூழலில் ஜெயந்தி சங்கரின் ஒத்துழைப்பு கிடைத்தது. விளம்பரங்களின் தேவையும்,சந்தாதாரர்களை உள்வாங்க வேண்டிய தேவையும் உணரப்பட்ட சூழலில் இம் மலர் வருகிறது.

காத்திரமான சஞ்சிகையின் தொடர்வருகையும்,அது புலம் பெயர் சூழலை உள்வாங்கியபடி நகர்த்தப்படவேண்டிய சத்திய வேட்கையும், நடைமுறைப் படுத்தவேண்டிய ஆவலும் வாசகர்களிடையே ஏற்பட்டுள்ளதை புரிதம் காற்றுவெளிக்கும் ஏற்பட்டுள்ளதின் விளைவே காற்றுவெளியின் நகர்தலுமாகும். எனவே, காற்றுவெளிக்கான தங்களின் பங்களிப்பை தொடர்ந்து தருவதன் மூலம் ஒரு இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். இதழ் பற்றிய விமர்சனத்தை எழுதுங்கள்.

அடுத்த இதழில் சந்திப்போம்.

**-ஆசிரியர்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயகுமாரி பரமலிங்கத்துடனான (நிலா) சந்திப்பு

## நேர்காணல்



அரியாலையூர் அம்புஜம், நிலா ஆகிய புனைபெயர்களில் எழுதி வரும் உதயகுமாரி பரமலிங்கம் இலங்கையில் பதினைந்திற்கும் மேற்பட்ட நாடகங்களை இயக்கியுள்ளார். தொலைக்காட்சிகளில் பங்கேற்றும், வானொலியில் அறிவிப்பாளராகவும் பங்களித்துவரும் இவர், 'எந்தையும் யானும்' என்ற கவிதைத் தொகுப்பினையும் 'எழுத எழுத'என்ற தனது அனுபவங்களின் கோர்ப்பாகவும் இரண்டு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். லண்டனில் கணினி வலை பொறியியல் துறையில் பட்டம் பெற்ற உதயகுமாரி நிலாமுற்றம் என்ற இணையத்தளத்தை திறம்பட நடத்தி வருகின்றார். இவருடன் ஒரு நேர்காணல்...

**நவஜோதி:** புலம்பெயர் வாழ்வில் எங்களுக்கு உடல்ரீதியாக வசதிகள் இருப்பினும் மனநிலையில் வெறுமைகொண்டது போன்ற உணர்விலிருக்கிறோம். ஆனால், நீங்கள் உடலில் வலு குன்றியவராய் இருந்தும் மனரீதியாக மிகவும் தென்பாகஇ மிகுந்த உற்சாகமாகஇ ஆளுமையோடு இருக்கிறீர்கள். இத்தகைய நம்பிக்கை உங்களுக்கு எப்படி வேரூன்றியது.?

**உதயகுமாரி:** இங்கு வருவதற்கு முன்பே எனக்குள் நம்பிக்கை வேரூன்றி விட்டது. நானொன்றும் வானததிலிருந்து குதித்தவளல்லவே! எனக்கும் நம்பிக்கை என்பது ஒரு நாளிலஉதித்து விடவில்லை. என் குடும்ப உறுப்பினர் மீது வைத்த பாசம் தான், இந்த உலகத்தில் வாழ்ந்தே ஆக வேண்டிய சூழலுக்கு என்னை ஆளாக்கியது. பதினெட்டு, பத்தொன்பது வயதாக இருக்கும் காலங்களில் நான் மனதுக்குள் மிகவும் முறுகியவளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் வெதும்பி தற்கொலை செய்தாலென்ன எனத் தீவிரமாக சிந்தித்ததுண்டு. என் மரணம் என் வீட்டாரின் இயல்பு நிலையைக் கெடுக்கலாம், பெற்றோரின் வாழ்வை மிகப் பாதித்து விடலாம், என் உடன் பிறப்புகளின் முன்னேற்றத்துக்கு பாதகமாக அமைந்து விடலாம் என்று நினைத்து என் உயிரைக் காத்து வந்தேன். எமக்காக இல்லாவிடினும் மற்றவர்களுக்காக வாழ்வது என்று என்னைச் சமாதானப் படுத்தி, இருக்கும் வரை மகிழ்வாக வாழ்வது என வாழ்ந்த காலங்களில் நான் பார்த்த "பூவே பூச்சூடவா" என்ற திரைப்படம் எனக்கு என் வாழ்வின் சமன்பாட்டை நிறுவித் தந்தது. அந்தத் திரைப்படத்தின் கதா நாயகி இருக்கும் சொற்ப நாட்களை மிக அர்த்தமுள்ளதாக வாழ முற்படுவது எனக்குப் பிடித்திருந்தது.

அதன் படி என் வாழ்நாட்களை அர்த்தமுள்ளதாக ஆக்க, மிக மும்முரமாக நேரத்தைச் செலவு செய்யப் பழகிக் கொண்டேன். அயலவர்களின் பிள்ளைகளுக்கு அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கப் பாடம் சொல்லிக் கொடுத்தேன். வேகமாக அதேநேரம் பயனுள்ளதாக என் நேரம் விரயமாகியது. என்னாலும் சிலவற்றை ஆக்கபூர்வமாகச் செய்ய முடிந்தது. எனது செயற்பாடு மற்றவர்களுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. அதுவே, எனக்கு நம்பிக்கையையும் மகிழ்வையும் தந்தது.

**நவஜோதி:** உங்களைப் பொறுத்தளவில் உங்களைப் பராமரிக்க ஐரோப்பாவில் பலவசதிகள் இருக்கின்றன. மேற்கு நாட்டில் உள்ளதைப்போன்று நவீன மருத்துவ வசதிகள் அல்லாத சூழலில் அதாவது இலங்கையில் உங்கள் வாழ்வை எப்படி எதிர்கொண்டீர்கள்?

**உதயகுமாரி:** ஆம், இங்கு பல வசதிகள் இருக்கின்றன. எம் நாட்டிலோ மிகவும் மட்டுப்படுத்தப் பட்ட வசதிகளே இருக்கின்றன. ஆண்டவன் புண்ணியத்தில் என் நோயும் அதிகரிக்க என் வீடு வசதிகளும் அதிகரித்தன. அதனால் எங்கள் நாற்சார் வீட்டை அப்பாவின் அனுமதியுடன் சமமான தளமுள்ள வீடாக மாற்றிக் கட்டி என் நாற்காலிச் சக்கரம் உருளக் கூடிய விதமாக ஆக்கிட என் வாழ்வுச் சக்கரத்தை ஓட்ட என் உயிருக்குயிரான அம்மா ஓர் சக்குமாடா - கவே உழைத்தார். அம்மா என் உடல் நலத்தைப் பேணுவதோடு என் உள்ள நலத்தையும் மிக உறுதியோடு, அதேவேளை மிக மெல்லிய உணர்வையும் பேணி வளர்த்த பெருமை அம்மாவையே சாரும். என் உடன் பிறப்புகள் கூட என்னை உதாசீனம் செய்யாது எனக்கு முக்கியத்துவம் தந்து என்னை ஆதரித்தது எனது பலமென்றால் மிகையில்லை.

அம்மாவின் உறுதியும் சோர்வு படாத குணமும் தான் என்னை இன்று உங்கள் முன்னே வைத்து இருக்கிறது. நோயுடன் போர் தந்த துன்பங்களை நானும் அம்மாவும் அனுபவித்தே இருக்கிறோம், நானோ அம்மாவோ குண்டுவீச்சுகளிலிருந்து பாதுகாக்க பதுங்குகுழிகளுக்குள் செல்வதில்லை. என்னை ஒவ்வொருமுறையும் தூக்கிச் செல்லமுடியுமா என்ன! வருவது வரட்டுமென எனவாழ்வை ஓட்டினோம்.

பன்னிரண்டு வயதிலே என்னையறி-யாமலே எனக்குள் புகுந்த Muscular dystrophy (limb/girdle) என்ற வியாதியால் சிறிது சிறிதாக என் உடலியக்கம்



பூவே பூச்சூடவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குன்றிப்போனது. பாடசாலை வாழ்வில் பெரும்பகுதி வியாதியாலும் வைத்தியத் தாலும் நிரப்பப்பட்டது. பாடசாலை செல்லும் காலங்களில் அப்பாவும் சகோதரர்களும் எம்முடன் இருந்தார்கள்; உதவினார்கள். காலங்கள் மாறின. உதவிக்கென இருந்த சின்னண்ணரும் இந்திய அமைதிப் படையினரால் சந்தேகத்தின் பேரால் சிறைவைக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து அவரும் இங்கிலாந்து போய்விட நானும் அம்மாவும் மட்டுமே ஊரில் வாழ்ந்தோம்.

ஏறக்குறையப் பத்து வருடங்கள் அம்மா தனியாகவே என்னைப் பராமரித்தார். என் கைகளை தன் கழுத்தைச் சுற்றி மாலை போலப் போட்டு என்னை இறுக அணைத்துத் தூக்கி சக்கர நாற்காலிக்கும் படுக்கைக்கும் என என்னை மாட்றியமர வைத்து என் தாய் என் தேவைகளைத் தீரத்த கதைகள் எல்லாம் என் மனதின் இரணங்கள். முப்பது வயதுக் குமரியை அறுபது வயதுத்தாய் சுமந்து பராமரிப்பது ஒன்றும் சுலபமல்ல.

அன்று அம்மாவிடம் அதற்கான வலு உடலிலும் மனதிலும் இருந்தது. இப்போது அம்மாவின் அருகாமையுடன் இங்கு வாழும் நான், இந்த நாட்டு அரசாங்கம் தந்த ஆதரவால் 24 மணிநேரமும் சேவைக்கென பணிபுரிய பணிப்பெண்களை நியமித்துள்ளேன். இனியும் நான் வாழ வேண்டும் என்பது இறைவன் விருப்பம் போலும்! அதனால் தான் என்னை இங்கிலாந்திற்கு அழைத்து வந்தாரோ என்னவோ!

**நவஜோதி:** உங்கள் வாழ்க்கையில் நம்பிக்கை ஏற்படுத்தியவர்கள் யார்?

**உதயகுமாரி:** அப்பா தான் எப்போதும் பெண்பிள்ளை நீ படித்திருக்க வேண்டும் என என்னை உற்சாகப் படுத்தினார். அம்மா எப்போதும் என் உடன்பிறப்புகளுக்கு தங்கச்சிக்கு அதைச் செய் இதைச் செய் என எனக்கு முக்கியத்துவம் கொடுத்து வளர்த்ததும் காரணம் என நான் நினைக்கிறேன். குறிப்பாக எனது இரண்டு அண்ணன்மாரும் சலிக்காது பாடசாலை கொண்டு சென்று வந்தார்கள். என் சின்னண்ணரின் அக்கறையும் ஊக்குவித்தலும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கடைக்குட்டி என்பதும் கூடக் காரணமாக இருக்கலாம். என்னை என் உறவினர்களும் இயலாதவள் என்று புறக்கணித்ததில்லை. எந்தக் குடும்பத்தினரும் தங்கள் பிள்ளைகளை மற்றவர் முன் தாழ்த்தி பேசுதல் கூடாது என்று கூறுவார்கள். அது என்விடயத்தில் மிகவும் உறுதுணையாக இருந்திருக்கிறது. உறவினர்கள் போல் அயலவர்களும் நண்பர்களும் என் மேல் மிகவும் நம்பிக்கை உள்ளவர்களாக விளங்கும் போது மற்றவர்கள் நம்புவது போல் செயற்படப் பழகிவிட்டேன்.

**நவஜோதி:** உங்கள் பொழுதை எப்படிக் கழிக்கிறீர்கள்? என்ன மாதிரிப் புத்தகங்கள் வாசிப்பீர்கள்? உங்களுக்குப் பிடித்த எழுத்தாளர் யார்?

**உதயகுமாரி:** எனக்கு ஓய்வு நேரம் கிடைப்பதே மிகவும் அரிதாக உள்ளது. என் நாளாந்த வாழ்க்கையே மிகவும் மும்முரமானது. அது எனக்குப் பிடித்தமானதும் கூட. மும்முரமாக இருப்பதால் கவலைப்படக் கூட அவகாசம் இல்லாமல் போய் விடுகிறது. எனக்கு இந்த 24 மணிநேரமுமே ஒருநாளுக்குப் போதாது எனும் விதமாக கடந்து செல்லும் என்வாழ்வில் இணையம் இணைந்தே பயணிக்கிறது. என்னதான் இணையத்துடன் என் வாழ்வு கழிந்தாலும் எனக்கு புத்தகம் வாசிப்பது என்றாலே மிகவும் பிடிக்கும். அதே வேளை எனது நோய் பலவகையிலும் என்னைத் தாமதப் படுத்துகிறது. மற்றவர்களைக் கொண்டு காரியங்களை ஆற்றி வாழ்வதனாலும் நான் வேகம் குறைந்தவளாகவே வாழ்க்கைப் பயணத்தை நடாத்தி வருகிறேன். கிடைக்கும் நேரத்தில் நூல் வாசிக்க என் ஆரோக்கியம் இடம் கொடுத்தாலும் ஆரோக்கியம் குறைந்த என் கரங்கள் மூலம் நூல்களைத் தூக்கிப் படிக்கும் ஆர்வம் குன்றியவளாக என் வாழ்வு கழிகிறது. இவர்தான் என் பிரியமான எழுத்தாளர் என்று கூறுமளவுக்கு குறிப்பிட்ட எழுத்தாளரது நூல் என வாசிக்கும் பழக்கம் எனக்கு இல்லை. முக்கியமாக தத்துவம் சார்ந்த புத்தகங்கள், மனதுக்கு வலுவூட்டும் தன்மை நிறைந்த நூல்கள் எப்போதும் என்னைக் கவர்வன. கவிஞர் கண்ணதாசனின் நூல்களை மீண்டும் மீண்டும் வாசித்துச் சுவைத்தவள் நான். கவிஞர் வைரமுத்துவின் கவிதைகள், அனுபவங்கள் கூட என்னைக் கவர்ந்தன.

சிறுவயதுக் காலங்களில் பிடித்த அளவுக்கு இப்போதெல்லாம் கதையம்சம் நிறைந்த புத்தகங்கள் பெரிதாகப் பிடிக்கவில்லை. அந்தக் கதைப் புத்தகங்கள் வித்தியாசமான சூழலைப் பிரதிபலித்தால் வாசிக்க முடிகிறது. அந்த விதத்தில் சுஜாதாவின் எழுத்துக்கள் எனைக் கவர்ந்தன. எல்லாவற்றிலும் தத்துவம் தேடும் மனப்பாங்கு எனக்குள் வந்து விட்டதை உணர்கிறேன்.


**நவஜோதி:** இணையத்தளத்தில் என்ன மாதிரியான மகிழ்ச்சியைப் பெறுகிறீர்கள்?

**உதயகுமாரி:** இணையத் தளம் என் போன்ற உடல் ரீதியான பாதிப்புக்களுக்கு ஆளான மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம். இணையத்தளம் நான் நினைப்பவர்களையும் நினைக்கக முடியாதவர்களைக்யும் கூடச் சந்திக்கும் தருணங்களைத் தேடித் தந்திருக்கின்றது. பலவிடயங்களையும் மற்றவர் உதவியின்றியே தெரிந்து கொள்ளப் பலவகையிலும் உதவுகிறது. பலரையும் மிக விரைவில் தொடர்பு கொள்ளவோ, காரியங்களை ஊக்கப் படுத்தவோ எனக்கு உதவி வருவதால் அறைக்குள் இருந்தே அவனியடங்க சிறகை விரிக்க உதவுவது இந்த இணையமே.

இது ஒரு புறமிருக்க எனக்கு மிக உற்சாகம் தரும் நண்பர்கள் பலரையும் சம்பாதித்துத் தந்தது இந்த இணையத் தளம். அவர்கள் தந்த ஊக்கம் என்னைப் பல கவிதைகளை ஆக்க வைத்ததை நான் இங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சொல்லியே ஆக வேண்டும். இந்த அன்புள்ளங்கள் தந்த ஊக்கத்தின் காரணமாகத்தான் என்னால் படும் துன்பங்களைக் கூடக் குறைக்க முடிந்தது. குறைக்க முடிகிறது.

அவர்களின் பாராட்டுகள் தந்த தென்பு என்னை பல துன்பங்களின் மத்தியிலும் பல்கலைக்கழகப் படிப்பைக் கூட வெற்றிகரமாக நிறைவேற்ற உதவியிருக்கிறது. எனதும் என் நண்பர்களினதும் படைப்புகளை பிரசுரித்து மற்றவர்களின் விமர்சனங்களை அறிய பொழுது போக்காக அமைத்தே நிலாமுற்றம் (www.nilamutram.com) என்ற போது அதைப்பார்வையுற்று தங்கள் எண்ணத்தை வெளிப்படுத்த உதவி வருகின்றது இத்தளம். என்னைப் பொறுத்தளவில் என் இயலாமையின் பாதிப்பைப் பலவகையில் குறைத்துக் காண்பிப்பது இந்த இணையம். வெளியே சென்று பலமணிநேரம் செலவழித்துச் செய்யவேண்டிய காரியத்தை வீட்டிலிருந்தே சில நிமிடங்களில் ஆற்ற முடிகிறது. தகவல் சேகரிப்பு, வங்கிப் பணமாற்றம், விரும்பிய பொருட்தேர்வு, பொருட்களை வாங்கல் எனப் பலவிதத்தில் என் போன்ற உடலநலம் குறைந்தவருக்கு இது ஒரு வரமன்றி வேறென்ன! அவசரமான உலகத்தில் மற்றவர்களின் வேகத்துடன் பயணிக்க இணையம் பெரிதும் எனக்கு உதவுகிறது.

**நவஜோதி:** எந்த வகையில் மனவுணர்வுகளுக்கு வடிகாலாக கவிதை அமைந்துள்ளது?

**உதயகுமாரி:** மனங்கனத்தால் கவிதை வரும் என்பார்கள். எனக்கும் அப்படியான அனுபவம் கிடைத்துள்ளது. பலவேளைகளில் என்மனதில் உள்ளவற்றை எழுத்தில் வடித்தவுடன் மனம் இலேசாவதை நான் உணர்கிறேன். பலரையும் வாழ்த்த நான் கவிதைகள் புனைவதுண்டு. அவர்களின் மகிழ்ச்சி என் மனதை நிரப்புகிறது.

**நவஜோதி:** உங்கள் படைப்புகள் எவ்வளவு தூரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது?

**உதயகுமாரி:** நான் இரண்டு நூல்களை வெளியிட்டிருப்பது நீங்கள் அறிந்ததே. காலமான, பேரன்புக்குரிய எனது தந்தையார் சிவஞானம் பரமலிங்கம் அவர்களது கவிதைகளையும் எனது கவிதைகளையும் அப்பாவும் யானும் ஏற்கெனவே திட்டமிட்டதன் படி 'எந்தையும் யானும்' என்ற பெயருடன் வெளியிட்டதோடு, மற்றைய நூலில் எனது வாழ்வின் சுமைகளையும் அவற்றை நான் கடந்ததன் அனுபவங்களையும் கொட்டி 'எழுத எழுத' என்ற பெயருடனும் 2006 நவம்பர் இல் வெளியிட்டிருந்தேன். அப்பா காலமாகி மூன்று வருடங்களின் பின்பே அது சாத்தியமானது.

'எந்தையும் யானும்' நூலில் வரும் அப்பாவின் கவிதைகளில் அவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதுக்கேற்ற அனுபவங்கள் தொனிப்பதாகவும், எனது கவிதையில் நான் என் உணர்வுகளைக் கொட்ட முற்பட்டது புலப்பட்டதாகவும், 'எழுத எழுத' என்ற எனது அனுபவக் கோர்ப்பு பலரையும் தங்களுக்குள் கேள்வி கேட்க வைத்ததையும் அறிந்து மிகவும் களிப்படைந்தேன். அது லண்டன் தமிழ் வானொலியில் பிரதி புதன் அங்கம் அங்கமாக வாசித்தளித்த ஆக்கம். அப்போது நான் வானொலியில் நிகழ்ச்சியின் தொடக்கத்தில் எனது அனுபவம் சோகமாகவும், சுகமாகவும்,பாடமாகவும் இருக்கலாம் என்று கூறுவது போல் அது பலருக்கு பாடமாக அமைந்தது என்று கூறும் போது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. எழுதியவற்றை நூலாக வெளியிட்டதன் பின்பு மிகப் பெரிய நிறைவு எனக்குக் கிட்டியது. ஒரு படி உயர்ந்து விட்டது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது.

**நவஜோதி:** உங்கள் சமூக ஈடாட்டம் எப்படி இருக்கிறது?

**உதயகுமாரி:** நான் இங்கு எங்கும் என் சக்கரநாற்காலி துணையுடன் பல இடங்களுக்கும் போய்வருகிறேன். வீதியில் நான் போகும் போது என் போன்றவர்களை புருவமுயர்த்தி எவருமே விநோதமாகப் பார்ப்பதில்லை. இலங்கையில் வாழ்ந்த காலங்களில் சக்கர நாற்காலியில் நான் வெளியே போனது மிக மிகக் குறைவு. அதுவும் என் வீட்டிலிருந்து பலமைல்கள் தொலைவிலுள்ள இடத்துக்கு சிற்றுடந்தில் சென்று இறங்கியபின், அங்குள்ள கோவில்களுக்கு சக்கர நாற்காலியில் போயிருக்கிறேன். அப்போது என்னிடம் சாதாரண சக்கர நாற்காலிதான் இருந்தது. இப்போது என்னிடம் உள்ள இந்த தானாக இயங்கவல்ல சக்கர நாற்காலியில் பல இடங்களுக்கும் போய்வருகிறேன். இங்கு விஸ்தரிக்கப்பட்டுள்ள வசதி காரணமாக சிற்றூந்து, பேருந்து, தொடரூந்து எல்லாவற்றிலும் பயணஞ் செய்து கோயில்கள், சில திருமணவைபவங்கள், இலக்கிய கூட்டங்கள், வணிக நிலையங்கள் என பல நிகழ்வுகளில் பங்குபற்றி வருகிறேன். இங்கு வந்து கிடைத்த இந்த வசதிகளால் நான் என் மிகப் பெரிய கனவான, பல்கலைக் கழகக் கல்வியைக் கூடத் தொடர முடிந்ததென்றால் பாருங்களேன்.

இந்த நாட்டுக்கு வந்ததால் பல இலக்கியவாதிகளின் அறிமுகமும் நட்பும் எனக்குக் கிடைத்திருக்கிறது. நானும் இலக்கியத்துறையில் முன்னேறியிருக்கிறேன்.

**நவஜோதி:** உங்களது மற்ஸ் கோணர் என்ற வானொலி நிகழ்ச்சியை லண்டன் தமிழ் வானொலியில் தயாரித்து வழங்கி வருகிறீர்கள். அது எப்படி சாத்தியமாகியது?

**உதயகுமாரி:** இங்கிலாந்து நாட்டில் முதன் முதலில் ஆரம்பித்த தமிழ் வானொலி சன்ரைஸ் வானொலி. இந்த வானொலியின் ஒரு நீட்சி தான் இலண்டன் தமிழ் வானொலி. இந்த வானொலியில் மாலை நேரத்தில் இடம்பெறும் நிகழ்வு தான் மாலைத் தென்றல். பிரதி திங்கட் கிழமை தோறும் ஐக்கிய இராச்சிய நேரப்படி மாலை ஐந்து மணி முதல் ஆறு மணி வரையுள்ள பொழுதுகளில் ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியில் கணிதபாடம் சார்ந்த கேள்விகளை நான் தொடுப்பேன். பதினொரு வயதுக்கு உட்பட்டோர், மேற்பட்டோர் என வினாக்கள் கொடுக்கப்படும். அப்போது உலகம் பூராவுமிருந்து நேயர்கள தங்கள் பதிலை தொலைத்தொடர்பு கொண்டு உடனே தெரிவிப்பார்கள். எல்லாப் பதில்களையும் உள்வாங்குவோம்.

முக்கியமாக ஐரோப்பியக் குழந்தைகள் கணிதத்தை தமிழில் பயில்வதும் அதற்கு விடையளிக்கும் பாங்கும் எனக்கு மிக ஆச்சரியமும் எனக்கு மிக்க மகிழ்வையும் தருவது. இப்படியாக பதில் அளிப்பு நிறைவு பெற்றதும் புள்ளிகள் வழங்குவதோடு விடைகளையும் அதன் படிமுறைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் கொடுப்பேன். இந்த நிகழ்ச்சியானது எனக்கு மிகுந்த மன நிறைவைத் தருகிறது.

நான் தனியார் நிறுவனத்தை யாழ்ப்பணம், அரியாலையில் பத்து வருடங்களுக்கு மேலாக நடாத்தியவள். நேருக்கு நேராக் மாணவர்களுக்கு படிப்பித்தல் என்பது ஒரு வித அனுபவம். அவர்களுக்குப் புரிகிறதா என அவர்கள் முகமே காட்டிக் கொள்ளும். இந்த வானொலி நிகழ்ச்சி கூட பல சிறார்களுக்கு உதவியாக அமைவதை அவர்கள் அளிக்கும் பதில்களின் தரத்திலிருந்தும், அவர்கள் மடல்களிலிருந்தும் அறியும் போது உள்ளம் பூரிக்கிறது. நாம் கற்ற கல்வியானது மற்றவர்களுக்கு அதுவும் பலருக்கு ஒரே நேரத்தில் சென்றடைகிறதே என்று நினைக்கும் போது மகிழ்ச்சி தான். நான் வீட்டில் இருந்தபடியே தொலைபேசி மூலம் கணிதம் பயிற்றுவிக்க இந்த நிகழ்ச்சி உதவுவது இனிமையே. திரு நடாமோகன் தந்த ஆர்வத்துக்கு அவருக்கு எனது நன்றிகள். ஒரு இனிய செய்தி என்னவென்றால் 'வல்லமை தாராயோ' என்ற நிகழ்ச்சியையும் நான் நடாத்தவுள்ளேன்.

**நவஜோதி**: பல்கலைக்கழக வாழ்வை எப்படிப் பார்க்கிறீர்கள்?

**உதயகுமாரி:** தொலைந்த ஆரோக்கியத்தால் நான் என் உயர்தரக்கல்வியை மற்றவர் களைப்போல் கற்க வேண்டிய வயதில் கற்கக் கிடைக்கவில்லை. அதனால் நான் பட்ட மனக்கவலை எழுத்தில் வடிக்க முடியாது. வளர்த்து வந்த வியாதியால் நான் சிறிது சிறிதாக நடக்க முடியாமல் வீட்டில் முடக்கப்பட்டேன். சிலவருடங்களில் தனியார் கல்வி நிறுவனம் நடாத்த முற்பட்டேன். என்றாலும் படிக்க வேண்டும் என்ற தாகம் என்னுள்ளே இருந்து கொண்டே தான் இருந்தது.

நானாக ஆங்கிலம் படித்தேன். தைக்கவும் பழகியது நானாகவே தான். சோதிடம் கூட நூல்கள் உதவிகொண்டு கற்றேன். கண்டது கற்கப் பண்டிதனாவான் என்பது மாதிரி நான் டிப்பிலே ஆர்வம் கொண்டவளாக, தேடல் காண்டவளாக இருந்த எனக்கு காலப்போக்கில் 96ம் ஆண்டு இடப்பெயர்வால் கொழும்பு வந்த காலங்களில் கணனி பயிலும் வாய்ப்புக் கிட்டியது.

உயர் கல்வி கற்க முடியவில்லையே என்ற எனது ஆழ்மனக்கவலையைத் தீர்த்தது எனது பல்கலைக்கழக நுழைவு. என் ஆழ்மனதில் ஊன்றிப் போயிருந்த துயரிலிருந்து நான் மீண்டதோடு, என் வாழ்விலும் அர்த்தமிருக்கிறது என்ற உணர்வை அது எனக்குத் தந்ததோடு, என் வாழ்விலும் ஓர் பிடிப்பை இது எனக்குத் தந்துள்ளது. அது மட்டுமல்ல பலர் மத்தியில் என்னைப் பற்றிய உயர்வான எண்ணத்தை தந்திருப்பதைப் பலதடவை உணர்ந்து இருக்கிறேன்.

**நவஜோதி:** இந்த நாடுகளில் வழங்கப்படும் சேவைகள் திருப்திகரமானதாக இருக்கிறதா?

**உதயகுமாரி:** இங்கு பலவசதிகள் இருக்கின்றன. அவற்றை முழுமையாக அனுபவிப்பதற்கும் பல சிரமங்களை எதிர் நோக்க வேண்டியிருந்தது. அதைத்தான் 'எழுத எழுத' என்ற புத்தகத்தில் எழுதியுள்ளேன். ஆனால், இந்த நாட்டுக்கு வந்து வாழும் இந்த வாய்ப்பு என் முன்னேற்றத்துக்கு மிகவும் கைகொடுத் திருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. சேவைகள் திருப்திகரமாக இருப்பதற்கும் நானும் ஒத்துழைக்க வேண்டியிருக்கிறது.

பணமோ, சட்டமோ எல்லாவற்றையும் செய்து விடமுடியாது. அதற்கு மேல் மனிதாபிமானத்துடன் செயற்படும் சேவகர்களைத் தெரிந்தெடுப்பதோ, தக்க வைப்பதோ எம் கையிலிருக்கிறது. எம் தேவைகளை மற்றவர்களை இயக்கிப் பெற்று வாழ்ந்து காரியங்களை வெற்றிகரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்த்துவது இலேசானதல்ல. உதாரணத்துக்கு உங்களுக்கு விரும்பிய பொருளை நீங்களே சென்று வாங்குவதில் உள்ள சுகம் மற்றவர்களை அனுப்பி வாங்குவதில் இருக்காதே!
பலவிதமான சேவைகள் இங்கு உள்ளன. அவற்றை நான் அறிவதோடு இலண்டன் தமிழ் வானொலியில் சில சந்தர்ப்பங்களில் மற்றவர்களுக்கு அறிவிக்கவும் செய்கிறேன். நான் அறியாத சேவைகளும் இருக்கலாம். இந்த நாட்டைப் பொறுத்தளவில் நாம் முயற்சி எடுத்தால் தான் முன்னேறலாம்.

**நவஜோதி:** உங்கள் தொழில் துறை பற்றிக் கூறுங்களேன்.

**உதயகுமாரி:** நான் கற்ற கல்விசார் துறையில் விரும்பியது போல் எனது வீட்டுக்கு அண்மையில் வேலை கிட்டாததால் படிப்பித்தல் துறையில் நான் இருக்கிறேன். இங்கு தனி ஒருவராக தனியார் நிறுவனம் நடாத்துவது என்பது அவ்வளவு சுலபமல்ல,என்றாலும் என் முயற்சியைக் கைவிடவில்லை. சிலருக்கு இலவசமாகக் கணனி பயிற்றுவிக்கிறேன்.

அத்துடன் ஓர் தொண்டர் நிறுவனமொன்றில் ஆலோசகராகப் பணியாற்றுகிறேன். பலருக்கும் வீடின்மை, இந்த நாட்டின் விதிமுறைகள், அதை எப்படி அணுகுவது என்பது போன்ற பல பிரச்சனைகள் உண்டு. வயது போன, வயது குறைந்த பலருக்கும் உதவுகிறது இந்தத் தொண்டர் நிறுவனம்.

**நவஜோதி:** உங்கள் வாழ்வின் கனவு என்ன நான் அறியலாமா?

**உதயகுமாரி:** கனவு காணுவது சுலபம். அதைச் செயற்படுத்துவது தான் வாழ்வின் சிறப்பு. சொல்வதை செய்யவேண்டும் என்ற கருத்தில் பிடிப்புள்ளவள் நான். ஆகவே, என் கனவுகளை வெளியில் சொல்ல நான் பிரியப்படவில்லை. மன்னிக்கவும்.

**நவஜோதி:** வேறு என்னென்ன முயற்சிகள் எடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள்?

**உதயகுமாரி:** தற்போது எனது கடும்முயற்சியால், எனது ஆறரை வருட கனவு நிறைவேறிய திருப்தியில் நானுள்ளேன். எனது சக்கர நாற்காலியிலேயே நானாக மகிழுந்தை திறந்து உள்ளே சென்று என் இருக்கையை மகிழுந்தில் பொருத்திய பின் பலம் குன்றிய எனது கைகளால் நானாகவே மகிழுந்தை செலுத்தும் விதமாக வடிவமைக்கப்பட்ட மகிழுந்தை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிட்டி இருக்கின்றது. என்கையை உயர்த்திக் கூட மகிழுந்தின் கதவைத் திறக்கும் வலு என்கைகளுக்கு இல்லாதபோதும் விரல்கள் மூலம் சாவியுடன் இணைந்துள்ள, தொலைவிலிருந்தே இயக்கவல்ல அழுத்தியின் (remote control) மூலம் மகிழுந்தின் கதவு திறக்கப்பட்டு நானே ஓட்டும் விதமாக பொருத்தப்பெற்ற மகிழுந்து எனதாகி விட்டது. அதைச் செலுத்தப் பயிற்சி பெற்றுக் கொண்டு இருக்கின்றேன்.

அதைத் தனித்து நானாகச் செலுத்தும் வல்லமை எனக்குக் கிட்டுமாயின் பல சிரமங்களில் இருந்து நான் தப்பிக்கொள்ளலாம். முக்கியமாக குளிர்காலங்களில் பொதுப் போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்துவதென்பது மிகச் சிக்கலானதும் நேரத்தை விரயப்படுத் துவதுமானதும் கூட. இந்த உடல் நிலையில் என்னாலும் நான் நினைத்த இடத்திற்கு நினைத்த மாத்திரத்தில் மற்றவர்களைப் போல் போக முடியுமாக இருந்தால் அதுவும் எனது முன்னேற்றப் பாதையை மேலும் விரிவுபடுத்தும் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவஜோதி** : நீங்கள் ஏதாவது வைத்தியத்தில் அக்கறை காட்டுகிறீர்களா?

**உதயகுமாரி** : நான் என்வாழ்நாளில் கைக்கொண்ட வைத்தியங்கள் பல. அவை என்னை நோயிலிருந்து விடுவிக்கவில்லை. ஆனால், நாளுக்கு நாள் வளரும் என் நோயைக் கட்டுப்படுத்தி இருக்கின்றது. என் தந்தையார் எனக்கெனச் செலவு செய்த பணத்தின் மதிப்பீடு பல மாடி வீடுகளை நிர்மாணிக்கும் செலவுக்கு நிகரானது. யாழ் பண்ணையில் மலையாள வைத்தியம் முதல், அக்குபங்சர் எனப்படுகின்ற சீனவைத்தியம், இந்தியாவில் வேலூர் மருத்துவமனை எனப் பலவிதமான வைத்தியங்களுக்கு ஆளானவள் நான். என் தாயார் தன் வாழ்வின் பெரும்பகுதியை எனக்கு வைத்தியம் செய்வதிலும் அதற்கான பராமரிப்புகளிலும் செலவு செய்து விட்டார். அண்மையிலும் கேரளாவிலுள்ள கோட்டக்கல் வைத்தியசாலைக்கு வைத்தியம் காரணமாக சென்று செப்டம்பர் 09 இல் போய் வந்தேன். இந்த வைத்தியம் நான் எதிர்பார்த்தபடி உடலிலுள்ள இறுக்கத்தைத் தளர்த்தி இருக்கின்றது. அதேவேளை உடலில் ஒரு புத்துணர்வு பெற்றது போல் உணர்கிறேன்.

**நவஜோதி**: 'வாழும் கலை' யில் நீங்கள் உறுப்பினராக இருப்பது பற்றி ?

**உதயகுமாரி** : இந்த அனுபவம் மிகவும் அற்புதமானது. எனது இந்திய நண்பர் என் உடல்நிலைகுறித்து மிக வருந்தி, குருஜி ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் வழிகாட்டலின் பேரிலே உலகின் பலபாகங்களிலும் புகட்டப்படுகின்ற 'வாழும்கலை' பற்றித் தந்த ஆலோசனையின் பேரில் அது பற்றிப் பயிற்சி பெற்று சுவாசப்பயிற்சி வகுப்புகளை மேற்கொண்டேன். இப்பயிற்சி எனக்கு மிகுந்த நிறைவை உடலளவிலும் மனதளவிலும் தந்திருக்கின்றது. அது மட்டுமல்ல நான் செப்ரெம்பர் 09 இல் இந்தியாவில் பெங்களூருவில் உள்ள ஆசிரமத்தில் அவரைச் சந்தித்து அளவளாவும் வாய்ப்பும் எனக்குக் கிட்டியது. அது மிகப்பெரிய பாக்கியம் என்றே நான் கருதுகின்றேன்.


## சிறுசஞ்சிகைகள் சில...

### இனிய நந்தவனம்

(மக்கள் மேம்பாட்டு மாத இதழ்)

18.பெரியசெட்டித் தெரு,

உறையூர்,

திருச்சி - 620003



### முற்றம்.

(கலை இலக்கிய மாத இதழ்)

ஆசிரியர்: A.V.Damian.

106,Ave.Du.8Mai 1945

94170 Le PERREUX,

France.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்...

தலைமையென்பது சதுரங்க ஆட்டம்.
தலைவன் மட்டுமே காய்கள் நகர்த்துவான்.
தலையை மீறிக் காய்கள் நகர்ந்திடின்
தலைகீழாகத் தலையெழுத்து மாறும்.
அழுக்கு மனமில்லாத் தலைமை
வழுக்கும் மனமற்ற தலைமை
ஒழுக்க இதயத்து அஞ்சாமை
பழுத்த ஆய்வுள்ளம் தலைமைத் தேவை.

நிறுவன நிர்வாகம் தலைவன் சொந்தம்.
மருவிலாக் கூட்டுறவு ஊழியர் பந்தம்.
குலையாத குழுநிலைக் கூட்டுறவுப் பணி
விலையற்ற உயர்வை எட்டும் ஏணி.
தலைவன் செயலைத் தானெடுக்கும் ஊழியன்
நிலைக்கும் சனநாயகக் கூட்டுறவையழிப்பான்.
அதிகாரத் துர்பிரயோகம் அவத்தைக் கலக்கம்.
அதன்விதியை மாற்றும் நிர்வாக ஒழுக்கம்.

சட்டம் அமைந்து நிலைக்கும் பிரவாகம்
திட்டம் அமைத்த ஒழுக்க நிர்வாகம்.
மேலான நிர்ணயம் தலைவன் சாற்றுவான்
கீழ்படியும் ஊழியன் தலைவனடியொற்றுவான்.
இருக்குமிடத்தில் யாவும் இருந்துவிட்டால்
பெருகிடும் நிறுவன ஆய்வுத் தேட்டங்கள்.
மெருகிடும் நிர்வாக இயக்கத்தின் தரங்கள்.
அருகிடும் சார்பான புகழ்மிகு வரங்கள்.
வாழ்க நிர்வாகம்! வளர்க ஊழியர் பண்பு!

- **வேதா. இலங்காதிலகம்**
ஓகுஸ், டென்மார்க்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்

பறவைகளின் பாதையில் குறுக்கிடும்
கரங்களைப் பெற்றிருந்தவனின் தலையில்
மரங்கள் முளைத்திருந்தன
கிளைகளையடைந்து கூடுகட்டுவதை
அஞ்சிய பட்சிகளெல்லாம்
பறப்பதையும் மறந்தன
கூடு கட்டுதலையும் மறந்தன
பின்னர் அப்படியே தம் இருப்பையும் மறந்து
அந்தரத்தில் இறந்து வீழ்ந்தழிந்தன

**-எம்.ரிஷான் ஷெரீப்,**
**இலங்கை**



# கசிவுகள்

அனுபவிப்புக்களின் கசிவுகளைக் கூறினேன்
கலங்கினர் சிலர்
இவர்களின் இரக்கம் வேண்டாமென
அடக்கி வாசித்தேன்
புனைவுகளின் வெளிப்பாடு என்றனர்
உள்ளக் குமுறலை
உள்ளவாறே வெளியிட்டேன்
முழக்கங்கள் என்றனர்
தொடர்ந்து ஒலிக்கும் இவர்கள் குரல்
கடந்து
என் பயணம்
நிறுத்தமற்றதாய்...இயல்பாய்...

**ச. விசயலட்சுமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கிருந்தோ வந்தான்....



**பா**தித் தூக்கத்தில் மனைவியை எழுப்பினான் சாரங். அந்தக்கணம் அவனது மகிழ்ச்சியை யாருடனாவது பகிர்ந்து கொள்ளத் தோன்றியது. ஆப்த நண்பன் ஆதித்யாவிடம் சொல்லலாம் என்றால் அவன் ஊரில் இல்லை. சுமதியை விட்டால் இப்போது அவனுக்கு வேறுயாருமில்லை. சுமதிக்கு கண்டிப்பாய சந்தோஷமாக இருக்குமென்று நம்பினான். பல நாட்களாக அவளும் சொல்லிக் கொண்டேதான் இருக்கிறாள் "எத்தனை நாளைக்கு இப்படி குறும்படம் வெறும்படம்னு எடுத்துட்டே இருப்பீங்க என்னதான் இதுல நீங்க அவார்ட் வாங்கினாலும் ஒரு பி.சி. ஸ்ரீராம் மாதிரி ஒரு பாலுமகேந்திரா மாதிரி சினிமாக்கு காமெராமேனாப் போயி பேர்வாங்கணும்.. அதான் என் ஆசை"

"சுமதி.. உன் ஆசை நிறைவேறப் போகுது!" என்று சொல்ல ஆரம்பிக்கும்போதே திக்குமுக்காடினான் சாரங்..

அவன் எதிரபாராத வகையில் சற்றுமுன் அந்த பிரபல இயக்குநர். அவனுக்கு "செல்"லில் சொல்லிய வார்த்தைகள் இன்னமும் அவன் காதில் ஒலிக்கின்றன "சாரங்! என்னோட புதுப்படத்துக்கு நீங்கதான் காமெரா மேன்!. நீரஜ் ஹீரோ! ஹீரோயினாக ஒரு புதுமுகம், பேரு ஸ்படிகா, பம்பாய் இறக்குமதி. அடுத்தவாரம் பூஜை மற்றவை மெயில்ல மானேஜர் அனுப்புவார்..ஓக்கே ?

"த்..த.. தாங்க்யூ டைரக்டர் சார்!" அவ்வளவுதான், இயக்குநர் அதிகம் பேசமாட்டார். ஆனால், அவரது படம் பலரால் பேசப்பட்டுவருகின்றன.

அவரது இயக்கத்தில் பணிபுரிய, எனக்கு ஒரு வாய்ப்பா? சாரங்கால் இன்னமும் நம்ப முடியவில்லை. சுமதி சட்டென எழுந்து உட்கார்ந்தவள், என்னங்க...என் கசின் ரம்யாவோட குழந்தை ராகுலை நாம தத்து எடுக்கலாம்னு நான் சொன்னதை இப்போவாவது ஏத்துக்கிட்டாங்களா ? பதினெட்டு வருஷமா நான் தவிச்ச தவிப்பு போதுங்க...வயசு நாப்பது எனக்கும், உங்களுக்கு நாப்பத்திமூணு ஆகுது....இனிமே குழந்தை பாக்கியமெல்லாம் கண்டிப்பா எனக்குக் கிடைக்க போறதில்ல... கடவுள்மனசு கல்லுன்னு நல்லா தெரிஞ்சிபோச்சு. அதனால காதும் காதும் வச்ச மாதிரி வீட்டோட வச்சி தத்து எடுத்துக்கிடலாம்....சரிதானே ? "என்று ஆவலும் அதட்டலுமாய் கேட்டாள். அவரவர் கவலை அவரவர்க்கு.

பெருமூச்சு விட்டான் சாரங். குழந்தை இல்லாதது சமூகத்தில் பெரியகுற்றமா என்ன ? திரும்பத் திரும்ப என்மனைவி என்குழந்தை' என்றே சுயநல வாழ்க்கைதான் வழவேண்டுமா?

மனசை உற்சாகப் படுத்திக்கொள்ள மாற்றுவழிகள் எவ்வளவோ இல்லையா என்ன ?

இல்லாததற்கு ஏங்குவதே இயல்பாகித்தான் போகுமோ ?

சாரங்கின் முகம் போனபோக்கைப்பார்த்து 'விஷயம் அது இல்லையா ? 'ஏமாற்றமாய் சுமதி கேட்டாள்'சரி அது உன் விருப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், நான் சொல்லவந்தது'.... என்று ஆரம்பித்தான். ஆனாலும் அவளை எழுப்பும்போது இருந்த வேகம் இப்போது இல்லையெனினும் நிதானமாய் சொல்லிமுடித்தான்

'இதுவும் நல்ல விஷயம்தாங்க...உடனே ஊருக்கு உங்கப்பாக்கு போன் போட்டு சொல்லுங்களேன்'

"வேணாம்.."

"இன்னமும் உங்கப்பா பேர்ல வருத்தமாக்கும்? அன்னிக்கு உங்க காதலை பலி கொடுக்க-கவைத்து என்னை உங்கதலையில கட்டினது மகாபாவம் தாங்க.."

"ஹலோ? அம்மாதாயே! பதினெட்டுவருஷம் முன்பு நடந்த கதையை நீ இப்போ கிளறாதே.நான் உன்கிட்ட உண்மை சொல்லிட நினைத்து சொன்னேனே தவிர இழந்த காதலையே நினைச்சி மருகிப்போகலை..கடந்துபோறமேகம் மாதிரி-வாழ்க்கையில் அதுவும் ஒண்ணுனு என்னை நானே தேத்திட்டேன். அந்தப்பொண்ணும் வேற யாரையோ கட்டிக்கப் போவதாய் எனக்கு கல்யாணப் பத்திரிகையும் அனுப்பிட்டா.. சரிசரி இப்போ நான் திரைப் படத்துக்கு காமெரா மேனா நிச்சயமாகி இருக்கிற விஷயத்தை நீயாரிடமும் சொல்லகூடாது, படத்தின் பூஜைமுடியட்டும், அதுவரை கப்சிப்புனு இருக்கணும் இந்த சினி ∴பீல்டுல கடைசிவரைக்கும் எதுவுமே நிச்சயமில்லை...ஆமாம்."

"நான் யார்ட்டயும் சொல்ல மாட்டேங்க.. நாளைக்குக் கோயிலுக்கு போயிட்டு கடவுளுக்கு மட்டும் மௌனமா என் நன்றியை சொல்லிட்டு வரேன்.."

"கொஞ்சமுன்னாடிதான் கடவுள் மனசு கல்லுன்னு திட்டினபோல இருக்கே? "அதனால் என்ன, உங்கமேல இப்போ கருணை காட்டி இருக்காரே?"

சுமதி தன் வயதைமீறி சின்னப்பெண்போலதுள்ளிக் குதித்தாள் மறுநாள் விவரமான மின்னஞ்சல் கண்டு அதன்படி சாரங் இயக்குநரின் இருப்பிடத்திற்குச் சென்றான் 'வாங்க சாரங்......' வரவேற்றார் இயக்குநர். இதமான அன்பான அவரது வரவேற்பில் குளிர்ந்தான் சாரங்.

'வணக்கம் ...ரொம்ப த்ரில்லிங்கா இருக்கு...'என்றான் சாரங் .

உதவி இயக்குநர் ஒருவர் சாரங்கின் அருகில் நின்றவர் அவன் காதோரம் "சாரங்! உங்களோட லேடஸ்ட் குறும்படம் "உனது விழியில் எனதுபார்வை" பார்த்து டைரக்டர் அசந்துபோட்யிட்டார். என்னடா காமெரால பேசறான்..

ஓவியம்மாதிரி காட்சிகளை அள்ளிட்டுவந்திருக்கான்! எப்படி இவனைப்பத்தி நீங்க யாருமே என்கிட்ட சொல்லலே?னு சத்தம்போட்டார்...சாரங்..நீங்க இந்தபடத்துக்குள் நுழைவதின் மூலம் எங்கயோ போகப்போறீங்க அது நிச்சயம்" என்றார் கிசுகிசுப்பான உற்சாகமான குரலில் .

சாரங் புன்னகையுடன் தலை அசைத்தான். எல்லாம் கனவுமாதிரி இருந்தது. வாழ்க்கையில் நல்ல சந்தர்ப்பங்கள் எல்லாம் மழைமாதிரி எதிர்பாராத தருணங்களில் தான் வருமோ ?

அந்த ஐந்துநட்சத்திர ஹோட்டலில் மேல்தளத்தின் பிரத்தியேக ஹாலில் பேச்சு வார்த்தைகள் நடந்துமுடிந்ததும் டைரக்டர் அனைவரிடமும் சில புகைப்படங்களைக் காட்டினார்...

"இதான் நம்ம படத்து ஹீரோயின் ...பம்பாய்ல வளர்ந்த பொண்ணு. ஆனாதமிழ் பேசுது.... நல்ல முகவெட்டு. பாருங்க அந்த நாள் சரோஜாதேவிமாதிரி எக்ஸ்ப்ரஸிவ் ஐய்ஸ்! எடுப்பானமூக்கு..மும்பாய்ல மாடலிங் பண்ணுது.. பதினேழு வயசுதான்.... சாவித்திரிமாதிரி துறுதுறுன்னு இருக்கு..கண்டிப்பா இந்தபொண்ணு தமிழ் நாட்டை ஒருகலக்கு கலக்கப்போகுது!"

எல்லாரும் ஆர்வமாய் அந்தப்புகைபடங்களை கையில் வாங்கிப் பார்த்துவிட்டு தலை அசைத்து ஆமோதித்தனர். சாரங் இயக்குநரின் முகத்தையே பார்த்து பிரமிப்புடன் அமர்ந்திருந்தான்..


அடேயப்பா, போட்டோவைப்பார்த்து எதிர்காலத்தைச் சொல்லும் அளவுக்கு அனுபவம் வாய்ந்த டைரக்டரின் கீழ் பணிபுரிவது எனக்கும் பெருமைதான். 'என்ன சார்ங்..நீங்கதான் போட்டோவை முக்கியமாபாக்கணும்... உங்க காமிரா கண்ணுல தான் குத்தம் குறையெல்லாம் கரெக்டா தெரியும்.." என்றார் இயக்குநர் சிரித்தபடி. அதற்குள் அவருக்கு மொபைலில் யாரோ அழைக்க காரிடாரில் ஓரமாய் நடந்துசென்று பேச ஆரம்பித்துவிட்டார்.

சாரங் நிதானமாய் அந்த போட்டோக்களில் ஒன்றை கையில் எடுத்தான்.

அடுத்தகணம் விழி குத்திட நின்றான். "வசுதா?" மனசு கூவியது . நல்லவேளை யாரும் அவனது முகமாற்றத்தை கவனிக்கவில்லை "ஸ்படிகா ! புதுமுகம்! . சொந்தப்பேரே நல்லாஇருக்குன்னு டைரக்டர் அதையே ஒக்கேபண்ணிட்டார்" உதவி இயக்குநர் திலக் சொன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாரங் நெற்றிவியர்வையைத் துடைத்துக் கொண்டான்.

"சாருக்கு ஏசிலகூட வியர்க்குது டைரக்டர்கிட்ட முதல் அனுபவம் அதான்னு நினைக்கிறேன் டோண்ட் ஒர்ரி மிஸ்டர்சாரங். ரொம்ப ஃப்ரீயா இருக்கலாம். செட்டுக்கு வந்துட்டா மனுஷர் பம்பரமா சுத்துவார்.நல்ல கலைஞர்களை என்கரேஜ் செய்வார் நம்ம டைரக்டர்"

"அதனால்தான் உயரத்திலிருந்து அவர் இறங்காமல் இருக்கிறார்.. கர்வமோ,தலைகனமோ இல்லாத அற்புத மனிதர் நம்மடைரக்டர்"

"அடுத்தவர்களை மதிக்கத் தெரிந்தவர்"ஆளாளுக்குப் புகழ்ந்தார்கள்; பிறகு அனைவரும் டின்னர்மேஜை நோக்கிவிரைந்தார்கள்.

சாரங் ஸ்படிகாவின் போட்டோவைப் பார்த்ததுமே அது வசுதாவின் வாரிசு என்பதை உணர்ந்து கொண்டு விட்டான்.

அந்தப் பெரியவிழிகளும் கூரிய நாசியும் கதுப்புக் கன்னங்களும் குறும்புப்புன்னகையும் வசுதாவிற்கே உரிய சிறப்பு அம்சங்கள்.

எத்தனைமுயன்றும் சாரங் கிற்குத்தனது பழைய நினைவுகளை நோக்கி மனம் திரும்பிப் போவதைத் தடுக்க இயலாமல். தவித்தான் பழைய விஷயங்கள் எல்லா வற்றையும் மனம் மறந்து விடுவதில்லை. மறக்கச் சொல்லி மனதிற்கு ஆணை பிறப்பித்தாலும் அது பல நேரங்களில் எதிர்விளைவைத்தான் ஏற்படுத்தும். இப்போது அந்த நிலைகுத் தள்ளப்பட்டான் சாரங்.

வசுதா! - அவளைப்பார்த்து பேசும்வரை சாரங்கனுக்கு (அப்போது சாரங்கன் என்ற முழு பெயரில் தான் அழைக்கப்பட்டான். பிறகு குறும் படங்களுக்கு பணிபுரியபோனபோது சாரங் என்றானது) பெண் என்றாலே அலர்ஜி. அம்மாவைத்தவிர அதிகம் வேறு பெண்களுடன் பேசி பழக்கமில்லாதவனாயும் அதை விரும்பாதவனாயும் இருந்தான். பெண்ணுடன் நட்பு கொள்வதற்கு அழகுமட்டும் போதாது வேறு ஏதோ ஒரு ஈர்ப்பும் தேவை என்பதை உணரவைத்தவள் வசுதா.

கரூர் அருகே அமராவதி நதி பாயும் அந்த கிராமத்தின் பசுமைக்காட்சிகளை தனது காமிராவில் படம் பிடித்துக் கொண்டிருந்தான் சாரங்கன்..

கல்லூரி நாளிலிருந்தே புகைப்படங்கள் எடுப்பதில் ஆர்வம் கொண்டவன். அப்போதெல்லாம் வாரவிடுமுறைகளில் தோளில் காமிராவை மாட்டிக் கொண்டு ஊர் ஊராக புறப்பட்டுப் போய்விடுவான் சென்னையில் ஒரு கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்த பிறகு மாதத்தில் ஓரிரு முறைமட்டுமே அப்படிப்போக முடிந்தது. நண்பன் ஆதித்யா உறவினர் வீட்டுக் கல்யாணத்திற்கு கரூர் போய்வந்தவன் அருகிலிருந்த ஒருகிராமத்தின் பெயரைச் சொல்லி சாரங்கனிடம் அதை அவசியம் அவன் போய்ப்பார்த்து அங்குஉள்ள இயற்கை காட்சிகளை ரசித்து புகைப்படங்கள் எடுக்கலாமென்று சொல்லி இருந்தான்.. தொப்போன்றில் ராணுவ வரிசையாய் நின்றிருந்த தென்னைமரங் களைஎல்லாம் ரசித்துப்பார்த்தபடி வந்தவன், சட்டென பாதிவளர்ச் சியிலேயே ஊஞ்சல்போல இறங்கி வளைந்து மறுபடி மேலே சென்று கொண்டிருந்த ஒருமரத்தின் கீழ் வளைவின் மீது அமர்ந்தபடி ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்த அந்தப் பெண்ணைப் பார்த்ததும் அதிர்ந்தான்.

தன்னந்தனியாய் யாருமில்லா இடத்தில் அழகான இளம்பெண் மும்முரமாய் புத்தகம் படிப்பது வினோதமாய் இருந்தது. அந்த வளைந்தமரத்தை புகைப்படம் எடுக்க விரும்பியவன் அதன் மீது அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்திருக்கவும் தயக்கமாய் அவளையே ஏறிட்டான்.

மஞ்சளில் அரக்குபூக்கள் போட்ட பாவாடையும் அரக்கு தாவணியும் மஞ்சள் ஜாக்கெட்டும் அணிந்திருந்த அவள் அந்த அந்திவானச் சிவப்பின் கீழ் தேவதையாய்த் தெரிந்தாள். சாரங்கன் வந்ததையே அறியாதவளாய் புத்தகத்தில் மூழ்கி இருந்தாள். அவன் நினைத்திருந்தால் அவளுடைய அழகை அவள் அறியாமலேயே தனது காமெராவில் கவர்ந்திருக்கமுடியும். ஆனால், அது அவனது சுபாவம் அல்ல கல்லூரியிலேயே சகமாணவிகளால் மிகவும் மதிக்கப்பட்டவன் சாரங்கன் படிப்பு உண்டு தனது காமெரா உண்டு என்றுதானிருப்பானே தவிர எந்தக் குறும்பும் செய்யாதவன்.. முக்கியமாய் இளம் பெண்களை சீண்டி விளையாடுவதை விரும்பாதவன் நண்பர்கள் அவனை ரிஷி என்பார்கள் செல்லமாக! காமெராவுடன் அவளைக்கடந்து நடந்தவனை. "ஹலோ?" என்று ஒரு குயில் அழைத்தது.

'அழகான பெண்களுக்கெல்லாம் குரலும் அழகாய்த்தான் இருக்குமோ?' - திரும்பினான் சாரங்கன்.

"ஊருக்கு புதுசா?" கேட்டாள். குறும்புச் சிரிப்புடன். தலை ஆட்டினான் "காமெரா வச்சிட்டு சுத்தறீங்க.இயற்கை அழகை படம்பிடிக்க வந்தீங்களா?"

"ஆ ஆமாம்.. இந்த கிராமம்பத்தி சென்னைல என் ஃப்ரண்ட் சொன்னார் அழகான இயற்கைக்காட்சிகள் இருக்கிறதாமே, அதான் படம் பிடிக்க வந்தேன்."

"அதென்ன எல்லா புகைப்படக்காரர்களுமே அழகைத்தான் படம்பிடிப்பீர்களா? "வம்புக்கு இழுப்பதுபோல அவள் தன்னைக் கேட்பதாய் சாரங்கன் நினைத்தான். "அழகு ஒரு நிறைவு அது, மனசுக்கு சந்தோஷம் தருவதால் அழகை ரசிக்கிறோம்"என்றான் "சந்தோஷம் தான் எதற்குமே எல்லையா? சந்தோஷம் என்றால் நிறைவுன்னா பிறகு தேடல் தொடருமா? தேடல் இல்லைன்னா புதுமைகளை சாதிக்கத்தான முடியுமா?"

சாரங்கனுக்கு அந்தப்பெண்ணின் பேச்சு வித்தியாசமாய்பட்டது.அவள் தொடர்ந்தாள் "தோல்வியிலும் சோகத்திலும் தாக்கம் ஏற்பட்டு சிந்திக்கமுடிகிற அளவுக்கு மகிழ்ச்சியில் அது சாத்தியமா சொல்லுங்க?"

"நீங்க சொல்வது உண்மைதான்..இப்படி ஒரு கோணத்துல நான் சிந்திக்கவே இல்லை." "தப்பா நினைக்காதீங்க... என் சுபாவம் எதையும் வெளிப்படையா சொல்லிடுவேன்.." "பராவாயில்லை"

"ஆனாலும் போலித்ததனமாய்ப் பேச எனக்குபிடிக்கறதில்ல...ஆமா உங்க பேர் என்ன?"

"சாரங்கன்"

"ப்ருந்தாவன சாரங்கா ராகம் நினைவுக்கு வருகிறது! என் பெயர் வசுதா.இந்த சின்ன கிராமத்துல ஒரு பள்ளிக்கூட வாத்தியாரின் ஏகபுத்திரி."

'வசுதா! பேரும் அழகாய்த்தான் இருக்கு!' மனசுக்குள் சொல்லி கொண்டவன், "அதென்ன புத்தகம் கையில்? பாடபுஸ்தகமா?" என்று கேட்டான்.

"பாடம்படிக் கத்தான் தோப்புக்கு வரணுமா? நான் பிஏ இலக்கியம் போனவருஷம் கரூர்காலேஜில் படிச்சிமுடிச் சிட்டேன்..இது கதை புத்தகம்."

"வாசிப்பதில் உங்களுக்கு விருப்பம் அதிகமோ?"

"வாசிப்பது சுவாசிப்பது போலத்தான். ரொம்பப் பிடிக்கும்"

"எனக்கு போட்டோகிராஃபி போல உங்களுக்கு ரீடிங் ஹாபி போல இருக்கு?"

"ஆமாம் அவரவர்களுக்கென்று ஏதோ சில விஷயங்கள் பிரத்தியேகமாய்ப் பிடித்துப்போய் விடுகிறது இல்லையா? அப்படி பிடித்த விஷயங்களை தனிமையில் அசை போடுவது எனக்குப் பிடிக்கும். ஆனால், தனிமையே நிரந்தரமெனறு ஒதுங்கி நின்று போய்விடக்கூடாது என்பார் என் அப்பா. மனசை நதிபோல ஓடவிட்டுட்டே இருக்கணும் என்பார். அதை தேக்கி நிறுத்திக் குளமா மாற்றீட்டா பாசி படியும்; நாற்றமடிக்க ஆரம்பிக்கும். ஓடிக் கொண்டிருக்கும் வரையில் நதிக்கு இருக்கும் சிறப்பு தனித்துத்தேங்கும் போது நீங்கி விடுகிறது என்பார்.அதனால் அப்பப்போ இப்படி தோப்பு, தனிமை, புத்தகம்..." சிரித்தாள் இயல்பாக.

"இலக்கியமாணவி என்பதை நிரூபிக்கிறீங்க நல்லாப் பேசறீங்க வசுதா.. நான் அதிகம் புக் படிக்கறதில்ல - பாரதி கவிதைகள்மட்டும் ஓரளவுமனப்பாடம். இப்போ நீங்க வாசிக்கிறது என்ன புத்தகம்னு நான் தெரிஞ்சிக்கலாமா?"

"இரும்புக்குதிரைகள்.. பாலகுமாரனின் நாவல்... பத்தாவது தடவையா விரும்பி ரசிச்சிப் படிக்கறேன்.. பிடிச்ச பாடலை டேப்பில திரும்பத் திரும்ப போட்டுக் கேட்கிற மாதிரிதான் இதுவும்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரும்புகுதிரைகள் பற்றி இந்த நொண்டிக்குதிரைக்கு எதுவும் தெரியாது வசுதா" சாரங்கன் சிறுவயதில் போலியோ பாதிப்பில் சூம்பிப் போன தனது வலது காலைக் காட்டியபடி இப்படிச் சொல்லவும் கண்களில் கோபம் பொங்க, அவனைப் பார்த்தாள் வசுதா. "தயங்கித் தயங்கி நீங்க பேசும்போதே நான் நினச்சேன்..எதை நினச்சி நீங்க ஒதுங்கிப் போகக்கூடாதுன்னு நானே வலிய அழைச்சிப் பேசினேனோ அதையே நினைச்சிக் குமைந்து போறீங்க... இருளைக்கூட "குறைந்த ஒளி" அப்படின்னு பாரதி சொல்கிறார். இருட்டைக் கண்டு மிரண்டு போகிறவங்க கண்டிப்பா கோழைங்கதான்.. உடல் ஊனம் வெளியே தெரியுது எத்தனைபேர் மன ஊனத்தோடு இருக்காங்க அவங்களோடப்பழகி அடிபடுகிற வரை நம்மால் எதையும் உணர முடிவதில்லை.

சாரங்கன், உங்களைமாதிரி நம்மை பத்தி என்ன நினப்பாங் களோன்னு மத்தவங்களை கவனிக்கறது உடல் ஊன முள்ளவங்க கிட்ட இருக்கிற கெட்டபழக்கம். எதையுமே. கற்பனை செய்து கவலைப்படுவதைவிட வெளிப்படையாபேசி நேருக்கு நேர் சண்டைபோடறதுல தப்பு இல்லே. என்பதுஎன் அபிப்பிராயம். அதனால நொண்டிக்குதிரையா இருக்கலாம் தப்பில்ல; நம்பினவங்களுக்கு மண்குதிரையாகத் தான் இருக்க கூடாது... தெரியுமில்லையா பழமொழி, "மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கின மாதிரி" அப்படின்னு ?

"தாங்க்ஸ் வசுதா! வாழ்க்கை சொல்லித்தரும் வலியை மனிதன் புரிஞ்சிட்டா எந்த வலியையும் பொறுத்துக்க முடியும்னு நான் கேள்விப்பட்டிருக்கேன்.

வலியிலிருந்து பிறப்பது தான் வலிமை. ஆனாலும் சமூகத்தின் அனுதாபப் பார்வையினாலே நாங்கள் சில நேரங்களில் பரிகாசமாய் காயப்படுவதை தவிர்க்கவும் முடிவதில்லையே ? அதனால்தான் ஒரு தாழ்வுமனப்பான்மை ஏற்படுகிறது. அவர்களாய் எங்கள் ஊனம் தெரிந்து பேசுமுன்பாய் நாங்களாக இப்படி முந்திக் கொள்கிறோம்"

"இங்கதான் தப்பு. முதல்ல நாம் நம்மை நேசிக்கப் பழகணும்.நம்மை நாமே வெறுத்தால் அது மத்தவங்களுக்கு சாதகமாய் போய்விடும். ..ஸாரி..

அதிகமாய்ப்பேசறேன்னு நினைக்கிறேன்..விட்டீங்கன்னா அருவிமாதிரி பொழிவேன்! சொற்பொழிவே செய்துடுவேன்..." சிரித்தபடி அவன் அருகில் வந்து நின்றுகொண்டாள். பிறகு, சரி, எங்கள்கிராமத்துக்கு விருந்தா - ளியாய் வந்திருக்கிற உங்களை எங்க வீட்டுக்குக் கூட்டிப்போனால் என்ன என்றாள்.

சாரங்கன், "எனக்கும் இப்படி ஒரு புத்திசாலிப்பெண்ணைப் பெற்ற தகப்பனாரைப் பார்க்கணும் தான்" என்றான்.

அவனுக்கே வியப்பாயிருந்தது தனது பேச்சில் தெரிந்தமாற்றம். அது வீடாஅல்லது நூலகமா என்று வியக்கும் அளவிற்கு வீட்டில் புத்தகங்கள் அழகாய் அடுக்கப்பட்டு, உன் நண்பர்களைச் சொல்லு உன்னைபற்றி சொல்கிறேன் என்பது போல படிக்கும் புத்தகங்களை வைத்தும் அவர்களைப்பற்றிக் கணிக்க -லாமென சாரங்கன் தான் கேள்விப்பட்டதை நினைத்துக் கொண்டான்.

வசுதாவின் அப்பா தன் மகள் அறிமுகம் செய்ததும் சாரங்கனை அன்போடு வரவேற்று, "என் பெண் எல்லாருடனும் வலியபோய் பேசிவிடமாட்டாள் அவளே உங்களிடம் பேசி வீடுவரை அழைத்து வந்திருக்கிறாள் என்றால் கண்டிப்பாய் சாரங்கன் வித்தியாசமான ஒரு இளைஞராயிருக்கவேண்டும்" என்றார். சாரங்கன் பணிவும் வெட்கமுமாய் புன்னகைத்தான் அந்தச் சிறு வீட்டில் டிவீ யைத்தவிர வேறு டெலிபோன்,. ஃப்ரிட்ஜ் இன்னபிற நவீன சாதனங்கள் எதுவுமே இன்றி எளிமையாய் காட்சி அளித்தது.

வசுதா உள்ளே சென்று காபியோடு கைமுறுக்கும் தங்காய்பர்பியும் கொண்டுவந்து வைத்தாள். "சாப்பிடுங்க தம்பி.. அடிக்கடி வாங்க நம்மூருக்கு..நம்ம வீட்ல தங்கிக்குங்க..

அருகில் பல இடங்கள் பார்ப்பதற்கு இருக்கு நான் கூட்டிப்போகிறேன் வாங்க, ஒண்ணும் கூச்சப்பட வேண்டாம்" அன்பில் அவனை ஆட்கொண்டார் வசுதாவின் அப்பா பரசு.ஐம்பது வயதிருக்கும். மெலிந்த தேகம்.வெள்ளைக் கதர்வேஷ்டி - கதர் சட்டையில் எளிமையாய்த் தெரிந்தார். பேச்சிலும் செய்கையிலும் நிதானம் நிழலாய்ப்பரவி இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னதங்கள் எல்லாமே அமைதியானவை தானே ?

சாரங்கன் அடுத்த சில நாட்களில் மறுபடி அந்த கிராமத்திற்குவந்தான். பரசுவும் வசுதாவும் அவனை கிராமத்தின் வித்தியாசமான பகுதிகளுக்கு அழைத்துச் சென்றனர். அங்கே அவன் எடுத்த சில புகைப் படங்களை பத்திரிகையில் போட்டிக்கு அனுப்பினான் ஒரு பழுத்த கிழவி ஓலை முடைந்துகொண்டிருந்த காட்சியை அவன் படம் பிடித்து "சருகு முடையும் ஓலை" என்ற தலைப்பில் அனுப்பி இருந்தான் அதற்கு முதல்பரிசு கிடைத்ததில் பரசுவும் வசுதாவும் மிகவும் மகிழ்ந்து போயினர்.

மெல்லமெல்ல சாரங்கனின் வருகை அதிகரித்தது. எந்தக்கணத்திலும் அவன் வசுதாவிடம் எல்லைமீறாமல் கண்ணியமாகவே நடந்து கொண்டதை பரசுவும் கவனித்தார். அன்று அவனிடம் தன் விருப்பத்தை கேட்டுவிட்டார்.சாரங்கன் திகைப் புடன், "என்னைப்பற்றி நன்கு தெரிந்து கொண்டுதான் இப்படிக்கேட்கிறீர்களா சார்?" என்றான். சாரங்கனுக்கு அவனது கால் ஊனம் பற்றிய கவலை நிறையவே உண்டு.

என் நம்பிக்கைக்கு பாத்திரமான நபராக நீங்கள் இருக்கிறீர்கள் சாரங்கன். உங்களைவிட என் பெண்ணுக்குப் பொருத்தமான துணைவர் யாரும் கிடைக்கமுடியாது. பழகின சில நாட்களிலேயே ஒரு சிலரால் தான்



மனசை அடைய முடியும். மனசு ஒரு கோட்டை. அதற்கு நம்பிக்கையின்மை, சந்தேகம் இன்னபிற தடைகளாய் பலகதவுகள் இருக்கும். அதையெல்லாம் தகர்த்து நீங்கள் என்மனசின் உள்ளே வந்திருக்கீங்க... தடைகள் விலகினால்தான் மகிழ்ச்சி புகுந்து கொள்கிறது. மகிழ்ச்சி மனதுக்கு உறுதியைக் கொடுக்கிறது. மனதில் உறுதி வேண்டும் என்று பாரதி கேட்டது இதற்குத்தான். மனதில் உறுதி வந்துவிட்டால் வாக்கினிலே இனிமை வரும் "நினைவு நல்லதாகும் நெருங்கிய பொருள் கைவசப்படும்" பரசு பேசப்பேச வசுதா மௌனமாய் அவனையே பார்த்தாள் இப்போது அவளது பார்வையில் இனந்தெரியாத நாணம் கவிழ்ந்திருந்ததை சாரங்கன் கவனித்தான்.

அந்தமௌனம் ஆயிரமாயிரம் வார்த்தைகளை அவனுக்குக் கண்வழியே அஞ்சல் செய்தது. சாரங்கன் புன்னகையுடன் தலை அசைத்தான். சென்னை சென்றதும் பெற்றோரிடம் சொல்ல அவர்களின் சம்மதம் கிடைத்துவிட்டதாயும் விரைவில் நிச்சயதாம்பூலம் செய்யவருவதாயும் கடிதம் போட்டுவிட்டான். வசுதா அப்போது தான் அவனுக்கு முதன்முதலாக

ஒரு கடிதம் எழுதினாள். தன் காதலைக் கொட்டி கவிதையாய் எழுதி அனுப்பினாள் சாரங்கனும் அவளது நேசத்திற்கு நன்றிகூறி பதில்போட்டான். இடையில் அலுவலக விஷயமாய் சென்னை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





-யிலிருந்து அவன் டில்லிக்கு மூன்று மாதங்கள் போக வேண்டிவந்தது. அப்போதெல்லாம் அவனால் கிராமத்திற்கு வர இயலாமல் போனது. அந்த நாட்களில் வசுதா தான் மிகவும் அவஸ்தைபட்டாள்.

"மாறும் கன்னிமனம் மாறும் கண்ணன் முகம் தேடும்..."

பரசு தன் மகள் சினிமாப்பாட்டை அதிசியமாய் முணுமுணுப்பதை ரசித்தார். நல்ல சிநேகிதத்தை காதலாய் மாற்றி அதற்கு உரமிட்டவர் பரசு. அன்று பெரியாழ்வார் மகளுக்கு அரங்கனைப் பற்றிச் சொல்லி அவள் மனசில் ஆழ்ந்த காதலை ஏற்படுத்திய மாதிரியான உணர்வில் இன்று திளைத்துபோனாள் வசுதா. நெஞ்சமெல்லாம் அவனது முகம் அடைத்துக்கொண்டு சுவாசத்தையே நிறுத்தியதுபோலத் திண்டாடினாள்.

காதல்வசப்படும்வரை எந்த ஒரு பெண்ணும் நிலை தடுமாற மாட்டாள். அந்த நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டால் மீண்டு எழுந்து வரவும் இயலாதவ-ளாகிவிடுவாள்.

கடிதங்கள் காதல் பாலங்களாயின. அன்று பரசுவின் முகவரிக்கு ஒரு கடிதம் வந்தது. பிரித்துப் படித்தார். சாரங்கனின் அப்பாவிடமிருந்து வந்த அந்தக் கடிதம் அப்படி ஒரு அணுகுண்டைத் தூக்கிப் போடுமென இருவருமே எதிர்பார்க்-கவில்லை. அதிகம் பாதிக்கபட்ட வராய் பரசு தான்; புலம்பினார்.

"அம்மாடி வசுதா. தாயில்லாப் பெண்ணா வளர்த்த உன் மனசுல ஆசைத்தீயை கொழுந்துவிட்டு எரியவச்ச பாவிம்மா நான். கடைசில இப்படி ஆகும்னு நான் நினைக்கவே இல்லையே அம்மா ? யாருக்கோ ஜாயிண்ட் கையெழுத்து போட்டு இருந்த சொற்ப சொத்து பணமெல்லாம் இழந்து ஜெயிலுக்குப் போகவேண்டி இருந்த நிலைமையில் உதவினவரின் மகளுக்கு சாரங்கனைக் கல்யாணம் செய்யபோவதாயும் நடந்தவைகளுக்கு மன்னிப்பு கேட்டும் கடிதம் எழுதி இருக்காரேம்மா மனுஷர்? வெறும் வார்த்தைகளில் வழ்க்கை யைத் தீர்மானித்துவிட்டார் . சாரங்கன் எதுவுமே எழுதவில்லை, அவன் சாது. அவனால் அப்பாவின் பேச்சைத் தட்ட முடிந்திருக்காது..." என்று கதறினார்.

தனக்குக் கொடுப்பினை இல்லையென்பதைத் தெரியப்படுத்தி சாரங்கனின் அப்பாவிற்கு பதில் கடிதமும் எழுதிபோட்டார். அடுத்த சில நாட்களில் வசுதாவிடமிருந்து அவளது திருமண அழைப்பிதழ் சாரங்கனுக்கு வந்து சேர்ந்தது.அதில் சின்னதாய் ஒரு கடித இணைப்பில், "இது இன்.ஃப்ர்மேஷன் தான் இன்விடேஷன் அல்ல" என்று ஆங்கிலத்தில் ஒரே வரியில்கைப்பட எழுதி இருந்தது. அதில் வசுதாவின் கோபம் சாரங்கனுக்குப் புரிந்தது,அதன் நியாயமும் புரியவே அவன் வேறுவழியின்றி அமைதியாகிப் போனான்.

"சார்ங்..டின்னர் சாப்பிடப் போகலயா கமான்..?" இயக்குநர் உரத்த குரலில் கேட்கவும், சாரங் வசுதவின் நினைவுகளிலிருந்து மீண்டான். அவர் தனது மொபைல் போனை ஷர்ட் பாகெட்டில் வைத்தபடி சாரங்கனின் தோள் தொட்டு மேஜை அருகே அழைத்துக் கொண்டு போனார்.

சாப்பிடும்போது அவர், "சாரங்.. நீங்க ஸ்படிகாவை கொஞ்சம் ஸ்னாப்ஸ் எடுக்கணும்...நாளைக்கு விஜயாகார்டனில் பூஜை முடிச்சதும் ஷுட்டிங் ஆரம்பிக்கப் போறேன்.. எந்தப்பத்திரிகை மீடியாவையும் நான் பூஜைக்கு ஷைக்கப்போகிறதில்லை. போன தடவையே என்படத்தில் நடிச்ச புதுமுகம்கிட்ட நிருபர்கள் ஏதோ கேள்விகேட்டு குடைஞ்-சிட்டாங்க, அதனால இந்தமுறை நான் யாரையும் புதுமுகத்தை போட்டோ எடுக்கவோ பேட்டி எடுக்கவோ அனுமதிக்கப் போவதில்லை.. நீங்க எடுக்கபோகும் போட்டோக்களை மட்டும் அவங்களுக்கு அனுப்பிடலாம்.

காலைல ஹோட்டல் பத்மால ஸ்படிகாவைபோய்ப்பார்த்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டோஸ் எடுதுமுடிச்சிடுங்க... மானேஜர் நீங்க வருவதுபத்தி அவங்களுக்கு தெரிவிச்சிடுவாங்க ஓகே? ஆல் த பெஸ்ட் சாரங்!" என்று படபடவெனப்பேசிவிட்டு கைகுலுக்கி விடை பெற்று நகர்ந்தார்.

சாரங்கிற்கு பழம் நழுவிப்பாலில் விழுந்தமாதிரி இருந்தது. நாளை ஸ்படிகாவை பார்த்ததும் சொல்லி விடவேண்டும், இது பருந்துகள் இருக்கும் கூட்டம் இங்கே கிளிகள் எல்லாம் இரையாகும் என்று வசுதாவின் பெண் என்பதால் அவளும கெட்டிக்காரியாகத்தான் இருப்பாள்; புரிந்துகொள்வாள்.

மறுநாள் சாரங் சரியான நேரத்திற்கு அங்கு சென்றுகதவைத் தட்டினான், திறக்கப்பட்ட கதவிற்குப்பின்னே நிலா ஒன்று நின்றுகொண்டு "ஹாய் நான் ஸ்படிகா.. டைரக்டர் நேத்திக்கே சொல்லி இருந்தார்.. படத்தின் காமெராமேன் ஷாரங் என்பவர் இன்னிக்கு வருவார்னு... ஆக்ட்சுவலி ஐயாம் வெயிடிங் பார் யூ சார்! வாங்க.."என்று வரவேற்றாள். பழகும் பண்பில் அழகுகூடும் என்றால் என்றால் அது இந்தப் பெண்ணிற்குப் பொருந்து மென சாரங் நினைத்துக் கொண்டான். வசுதாவைபோலவே ஹிப்போக்ரசி இல்லாத பெல்லாத பேச்சு! பதினெட்டுவருடம் முன்பு சந்தித்த கிராமத்துப் பெண் வசுதா இன்று மாடர்ன் உடையில் அதே சிரிப்பும் வெளிப்படையான பேச்சுமாய் தன் எதிரே நிற்பது போலத் தோன்றியது 'எப்படிக்கேட்பது இவளிடம் உன் அம்மா பெயர் வசுதாதானே என்று?'

அவன் தயங்கும்போதே , ஸ்படிகா, "சார்..அம்மா இங்கே பக்கத்துல கடைக்கு ஏதோ தமிழ்ப்புத்தகம் வாங்கப் போயிருக்காங்க, ஷி ஈஸ் ஃபாண்ட் ஆஃப் புக்ஸ்! பம்பாய்ல அதிகம் தமிழ் புக்ஸ் கிடைக்காதா அதான் சென்னை வந்ததும் அள்ளிட்டுவரக் கிளம்பிட்டாங்க.. திரும்பி வரும் நேரம்தான்... இருந்து பார்த்து பேசிட்டுப் போங்க சார் ப்ளீஸ்?" என்று அவன் சந்தேகத்தை உறுதிபடுத்தினாள்.

வசுதா அடுத்த சில நிமிஷங்களில் உள்ளே நுழையும் போது, சாரங் அந்த ஹோட்டல் அறையை ஒட்டிய பால்கனியில் நின்று ஸ்படிகாவை அங்கே நிறுத்திவைத்து புகைப்படம் எடுக்கக் கோணம் பார்த்துக் கொண்டிருந்தான்.

வசுதா வந்துவிட்டாள்.

"ஹாய்ம்மா!..காமெரா மேன் வந்து ஏழெட்டு ஸ்னாப்ஸ் எடுதுட்டார்மா.. இன்னும் ரண்டு எடுக்கணுமாம் பால்கனில..." என்று குழந்தை போலக் குதித்தபடி கூவினாள் ஸ்படிகா.

"சரி..முடிச்சதும் நீ ஜிம்முக்குப் போகணும் மறந்துடாதே ஸ்படிகா.." வசுதாவின் குரல் பால்கனியில் நின்ற சாரங்கின் செவியைத்தழுவியது.

"சார்.! ஆங்கிள் சரியா இருக்கா?. ரெடியா?" ஸ்படிகா கேட்டபடி அருகில் வந்தாள் சாரங் சொன்ன கோணத்தில் நின்றாள் "ஆச்சும்மா" என்று சாரங் சொன்னதும், "தாங்க்ஸ் சார்..நான் ஜிம்முக்குப் போகணும்; அம்மாவும் வந்துட்டாங்க நீங்க அவங்ககிட்ட பேசுங்க...பைபை என்று கை அசைத்து விடை



பெற்று வெளியேறினாள். சாரங்கிற்கு மனதோடு கால்களும் தயங்கின.

அதற்குள் வசுதாவே பால்கனிக்கு வந்தவள், சாரங்கைப்பார்த்ததும் ஒருக்கணம் யோசித்தாள். நாற்பதை நெருங்கும் வயதிலும் இளமையை அதிகம் இழக்காத அவளுடைய முகத்தை நேருக்கு நேர் பார்க்கவே கூசினான் சாரங்.

வசுதா சட்டென அவனது வலது காலைக் குனிந்துபார்த்தவள் உடனே, "ஓ" நீங்கதான் டைரக்டர் சொன்ன காமெரா மேன் ஷாரங்கா ? *என்றாள் வெறுப்பான குரலில்.*

"ஆமாம் வசுதா..உன் பெண் போட்டோவை நேத்திக்குத் தான் பாத்தேன். உடனேவே அது உன் பெண்தான்னு புரிஞ்சது. உடனேயே எனக்கு மனசு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடிச்சது.வசுதா, நீ கெட்டிக்காரி, புத்திசாலி .ஆனாலும் இந்தக் கனவுத் தொழிற்சாலையில் உன் பெண் காலடி வைக்க நீ எப்படி சம்மதித்தாய் ? இங்கே இள்மை ரசிக்கமட்டும்தான்; ஆராதிக்க அல்ல என்று உனக்குத் தெரியாதா ? ஆண்களின் ஆளுமையில் இருக்கிற உலகத்தில் எந்த தைரியத்தில் உன் குழந்தையை நடிக்க அனுமதிக்கிறாய்? வேண்டாம் வசுதா... ஸ்படிகாவை அழைத்துக் கொண்டு திரும்பப் போய்விடு...."

சாரங் உணர்ச்சிவசப்பட இப்படிச் சொன்னதும் முகம் சிவக்க அவனைப்பார்த்தாள் வசுதா .

"எங்கே போவது ? காதல் கனவை நனவாக்காமல் அப்பா சொல்கேட்டு கோழையாய் காதலியை மறந்தவன் பின்னாடியா அல்லது அவனைப் பழி வாங்க அவசர அவசரமாய் அந்தக் காதலி கல்யாணம் செய்து கொண்டு அவனிடம் வெளிப்படையாய் பேசுவதாய் எல்லா உண்மையையும் சொன்னதில் சந்தேகம் கொண்டு ஆறுமாதக் கைக்குழந்தையுடன் பெண்டாட்டியை நடுராத்திரில பம்பாய் ரயிலடில் விட்டு ஓடிப்போன புருஷனைத் தேடிப் போவதா? தாயில்லாப்பெண்ணாய் வளர்த்தவளின் வாழ்க்கை தன்னால் இப்படிப் சகலமும் தெரிஞ்ச வளாகப் பெண் இன்னிக்கு இருக்கணும்.. விவரம் தெரியாதவளாய் இருந்தால் உலகம் ஏமாற்றும். மனதில் உரத்துடன் உடலில்பலத்துடன் வாழ்க்கையை ஏத்துட்டு, சிலநல்ல உள்ளங்கள் செய்த உதவியினால் மானத்தோடு மகளையும் வாழவச்சிட்டு இருக்கேன். என் மகள் என்னைப்போல் தான் இருப்பாள். எல்லா இடத்திலும் நன்மைகளும் இருக்கு. தீமைகளும் இருக்கு. பகுத்தறிந்து நல்லபாதையில் செல்ல மனம் என்கிற கடிவாளமும் இருக்கு. .உங்கள் அட்வைஸ் எனக்குத் தேவை இல்லை.. நீங்கள் போகலாம்" என்றாள் உஷ்ண மான குரலில்.



"வசுதா?" கண்ணோடு வாய் கெஞ்சியது சாரங்கிற்கு. தொடர்ந்து ஏதோ பேச வந்தவனைப் பார்த்து "பட்" என்று இரு கை சேர்த்து குவித்தாள் வசுதா. பிறகு வாசல்கதவு நோக்கி கை காட்டினாள்.

சாரங் மௌனமாய் நடந்தான். சற்றுமுன் வசுதா பேசிய வார்த்தைகள் சாட்டையடியாய் நெஞ்சில் வந்து விழுந்தன. வசுதாவின் வாழ்வில் தான் மண் குதிரையாய் இத்தனை நாளும் இருந்திருக்கிறோம் எனும் நினைப்பே அவன் நெஞ்சைப் பிழிந்தது. இனியாகிலும் அவளது நாவிலிருந்து சவுக்கடி பெற்றாகிலும் வண்டிக் குதிரையாய் வசுதாவின் வாழ்க்கைப் பயணத்தில் முன்னேற்றிச் செல்ல மனம் தீர்மானித்தது.

ஹோட்டலைவிட்டு வெளியே வரும்போது சாரங்கின் வாய், தான் படித்த பாரதி பாடலை முணு முணுத்தது. "பெண்டுகளைத் தாய் போற் பிரியமுற ஆதரித்து நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய் பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய் எங்கிருந்தோ வந்தான்..." ●


---

வெற்றி
மகத்தானது.
அவசியமானால்
தோல்வி
அதைவிட
மகத்தானதாய்
இருக்கும்

**- வால்ட் விட்மன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஈழத்து**
**நூல்கண்காட்சி - 2010**

ஈழத்து ஃபுலம்பெயர் தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள்காட்சிப் படுத்தலும், ஆவணப்படுதலுமாக தொடர்ச்சியாக- நடத்தப்பட்டு வருகிறது.

அரசியல், ஆன்மீகம், இதிகாசம், இசையியல், சமயம், வரலாறு, நாவல், சிறுகதை',சிறுவர் இலக்கியம், கவிதை, தொல்லியல், திரைப்படப்பிரதி, நூலகவியல், போராட்டப்பதிவுகள்,சிறு சஞ்சிகைகள், விவசாயம், புவியியல், சோதிடம், மொழி பெயர்ப்பு என விரியும் ஈழத்து நூல்களின் காட்சிப்படுத்தலுக்கு உங்களின் நூல்களின் ஒரு பிரதியினை அனுப்பி உதவுங்கள்.

**தொடர்பிற்கு:**
**முல்லைஅமுதன்**
mullaiamuthan_03@hotmail.co.uk

# பாணன்

ஒரு முற்றிய முழுமரத்தின் கீழிருந்து
தளர்ந்துபோன உடலுடையவன்
இசைக் கருவியை இசைத்துக் கொண்டிருந்தான்
சுழல் காற்றில் புழுதியும்
சருகுகளும் மேற்கிளம்பிப் பறந்தன
பிச்சை விரிப்பில் வழிப்போக்கர்களின் சில்லறை
நாணயங்கள்

விழுந்து சிதறியிருந்தன
எதற்காகவோ உருக்கமாய்ப் பீறிட்டு
மனதைப் பிசையும் அவனது இசையில்
நிராசைகள் மிகுந்திருந்ததாக உணர்ந்தேன்
வெயில் திரும்பிச்செல்லும் பாதையில்
அலைகளை ஏவிக்கொண்டிருப்பவனாய்
அதிர்வுகளை சிதறுகிறான்
கசங்கிய போர்வை நுனி எழும்பி
ஓவியமென நெளிகின்றது...
அந்தரத்தில் உதறிப்போகிற நிம்மதியற்ற ஆர்ப்பரிப்பை
முகில்களிடம் அள்ளி வழங்கிக்கொண்டிருந்தது
பாணனின் இசைக்கருவி
எதிலும் கவனமற்றவனாக நிரம்புவதும் வடிவதுமான
அவனது இசையின் தவத்தினுள்
நுழைந்து கொள்ள முனைபவனாக மூர்க்கமாகிறான்
வெம்மையான தெருக்களில் நடந்து களைத்த
உயிரின் ஊடுருவும் ஓலம்
விரைவாக சூழலில் இருட்டை கவியச் செய்கிறது
அவன் பொருட்டு இசையில் உருக்கப்பட்ட
மதியப் பொழுதின் பிராத்தனைகளை
ஏழுவானங்களுக்கும் கொண்டு செல்கிறது காற்று
அசையாமலிருந்தேன்
அவன் சென்றதன் பிறகும்
வெகு நேரமாகியும் ...

**-அனார் கவிதைகள் (இலங்கை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் பொறுப்பதற்குப் பிறந்தவள்



அந்த நிமிடங்களில் நீயாக நீயிருக்கவில்லை.
உன்னுள் இருந்த
மதுபோதை ஒருபுறம் காமப்பசி மறுபுறம்...
இரண்டின் வெளிப்பாட்டிலும்
நீ புணரும் மிருகமானாய்
காதலுக்கு மட்டுமே கசிகின்ற என் யோனி
உன் ஆவேசத்திற்கு கசிய மறுத்தது.
உன் விடாப்பிடியான போராட்டத்தினூடே
என் வறண்ட யோனிக்குள்
தாகம் தீர்க்க முயன்றது உன் ஆண்குறி
ஒன்று. இரண்டு. மூன்று என
என் யோனித்துவாரத்தை
நீ ஊடறுக்கும் ஒவ்வொரு முறையும்
உடலை விட மனது வலித்தது
உன் வேகம் அதிகரிக்க
என்னில் கண்ணீர் தயாரானது
வழமையாய் காதலில் கசிந்து
உன்னைக் கட்டியணைத்து
முத்தமிடும் எனக்கு
உன் மூச்சுக்காற்றின்
மதுநெடி சாட்டையடித்தது
எங்கிருந்தோ வந்து
அம்மாவின் முகம்
மனத்தில் நிழலாடியது
இதைத்தானா
"பெண் பொறுப்பதற்குப்
பிறந்தவள்" என்றாய் அம்மா?
என் உயிரின் கடைசிச் சொட்டு
பலம் வரைப் பொறுத்திருந்தேன்
அப்பாடா
உன் நீர் கசிந்து
நீ மனிதனானாய்
என்ன உணர்ந்தாயோ
"பசிக்குதா?" என்றாய்
முழுதாய் உனது பசி தீர்ந்த பின்.
குரல் தழும்ப
"வலிக்குது" என்றேன்
எந்தப் பதட்டமும் இல்லாமல்
"ஸாரிடா செல்லம்" என்றாய்
உருண்டு திரண்டிருந்த
என் கண்ணீர் துளிகள்
மௌனமாய் வழிந்தன!
சில நிமிட மௌனங்கள்
எங்கே என தலைகோதி
என்னை வருடிக்கொடுப்பாயோ
என எதிர்பார்த்த எனக்கு
உன் குறட்டை ஒலி
உயிரை வதைத்தது.
உன் தாகம்
உன் தேவை- தீர்ந்ததால்
உனக்கு உறக்கம்
என் வலி
என் அழுகை-ஓயாமல்
விழி மூடி விழித்திருந்தேன்

- மாதுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடுவானத்தின் கீழ் தனியாக

அம்புலியைச் சூழ்ந்து, சிதறி
மந்திரம் சொல்லும் தாரகைச் சுடர்கள்
சிறிய பன்சலை வளவெங்கும்
கருணையொளி தூவுகின்றன
பழைய தோணி
வாய்க்காலில் தனித்துக்கிடக்கின்றது
உற்சவத் திடலின் வெறும் மூச்சுத்
துயரின் திசையிலிருந்து
துரோகத்தின் வலியை உமிழ்ந்து
செல்கின்றது
தொடங்குவதும்
தொடங்கியதைத் தொடர்வதும்
தொடர்ந்ததைக் கைவிடுவதும்
பின் தொடங்குவதும்
ஆர்வமும் தயக்கமுமாய் தத்தளிக்கின்றன
மேகங்கள்.
முள்கம்பி வேலிகளுக்கப்பால் திரண்டு
விழுங்கப்பார்க்கும்
பீதியிருட்டின் பிளந்தவாய்க்கு
எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு
நிற்கிறேன்
அவநம்பிக்கை கூடிக் கொண்டுவரும்
இந்நாட்களில்
அவனைக் குறித்தான எண்ணங்களில்
முடிச்சுகள் விழத்தொடங்கிய பிற்பாடு
உவகை பொங்கும் உறவின் கண்களில்
உண்மை கொடுங்கனவாகித் தெரிகின்றது
பல்லாயிரம் குற்றச்சாட்டுக்களால்
பித்துப்பிடித்தவளின் இரத்தத் துளி
பிரபஞ்சத்தை நிறைக்கத் தொடங்குகின்றது
அஸ்தமன உதடுகளில் சிக்கியிருக்கும்
இறுதி ஒளிக்கற்றையும்
தின்னப்படுவதை வெறித்தபடி
நிற்கிறேன் தொடுவானத்தின் கீழ் தனியாக..

- **அனார் கவிதைகள்(இலங்கை)**

## மலைகளின் பறத்தல்

முன்னொரு நாளில்
தோன்றியபோதெல்லாம்
இறக்கைகளை விரித்துக்கொண்டு
பறந்து கொண்டிருந்த மலைகளைக்
கெஞ்சிக் கேட்டேன்
பறப்பதை நிறுத்திவிடுங்களேன்

நிமித்த காரணம் சொல்லலாமே
அவை கேட்டன
எங்கள் குழந்தைகள்
தூக்கத்தில் எழுந்து அலறுகிறார்கள்
எங்களுக்கே சோறு பலசமயங்களில்
இறங்குவதில்லை
சில பறவைகள் உங்களைக் கண்டு
பறத்தலையே
மறக்கத் துவங்கிவிட்டன
எங்கள் குழந்தைகள் வெட்டவெளிகளில்
விளையாட மறுக்கின்றனர்
பயிர்த்தொழில் பாதிப்படைகிறது
எங்கள் நிம்மதி
உங்களால் போய்க்கொண்டிருக்கிறது

தங்களால் யாரும் உயிரிழக்காத போதும்
எங்களுக்காக
தாமே தம் இறக்கைகளை இற்றுப்போக
செய்து
பறத்தலை நிறுத்திவிட்டன மலைகள்

இன்று யுத்த பேரிகைகளும்
போர்ச்சாவுகளும்
உறக்கத்தை கவ்வும் இவ்வேளையில்
மலைகள் சிரிக்குமோ அழுமோ

- **மதன்.GKM**

வடக்குவாசல் டிசம்பர் 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜெயந்தி சங்கர்



சீனச் சமூகம் ஆணாதிக்கம் நிறைந்த ஒன்றாக இருந்தது. பெண்ணை ஒரு திருமணப் பொருளாக மட்டும் பார்த்தது. கொக்கி வடிவிலுள்ள தாமரைத் தண்டுகளின் (lotus hooks) மேல் இருக்கும் தாமரை மலரைப் போல ஆணின் கண்களுக்கு பெண் தெரிய வேண்டும் என்று நினைத்தது அச்சமூகம். மேலும், சிறிய பாதங்களே அழகானதாகவும் நளினமானதாகவும் கருதப்பட்டது. 3-4 அங்குலமே இருக்கும்படி பாதத்தின் வளர்ச்சியைத் தடுக்க பாதங்களை மடக்கி இறுக்கிக் கட்டினார்கள். மூன்று அங்குலமிருந்தால் தங்கத் தாமரை என்றும் நான்கங்குலமிருந்தால் வெள்ளி என்றும் நான்குக்கு மேலிருந்தால் இரும்பு என்றும் அழைத்தார்கள்.

"தாமரைத் தண்டு" ஆணுக்குள் இச்சையையும் ஆசையையும் தூண்டும் உருவம் என்று சீனர்கள் திடமாக நம்பினார்கள். உடலுறவுக்கு முன் ஆண் தொட்டுத் தடவி, விளையாடி மகிழ தன் பாதங்களை அவனின் விருப்பத்திற்கேற்ப மாற்றிக்கொள்ளத் துவங்கிய பெண் காலங்காலமாக தன்னை வருத்திக் கொண்டு வந்திருக்கிறாள். அவ்வகைப் பாதங்கள் அவளிடம் கீழ்ப்படிதலை வலியுறுத்துவதாகவும் கொள்ளப் பட்டது. பிறரின் உதவியில்லாமல் வெகுதூரம் போகவோ உலகை அறியவோ ஒரு பெண்ணுக்கு உரிமையில்லை. அவள் கணவனின் கொடுமைக்கும் அடிஉதைக்கும் பயந்து கூட அவள் ஓடிவிடலாகாது. தவிர, கணவனிடமிருந்து பிரிய நினைக்கும் மனைவியும் வீட்டை விட்டு ஓடிவிடக்கூடாது என்ற முன்யோசனை இதில் இருந்திருக்கிறது. வாழ்நாள் முழுவதும் ஒரு பெண் தனியாக இயங்கிவிடக்கூடாது அவள் ஒரு ஆணைச் சார்ந்தே இயங்கவேண்டும் என்பது போன்ற உள்நோக்கங்கள் இருந்திருக்கின்றன. பாதங்களைக் கட்டுவதற்கு வேறு சில காரணங்கள் சொல்லப்பட்டாலும், இவை தான் முக்கியமானவை. இதன்மூலம் பெண்ணின் கற்புநிலை காக்கப்படுவதாக நம்பினார்கள். மொத்தத்தில், பெண்களுக்கு விதிக்கப்பட்டது அடிமை வாழ்வு.

சீனர்களின் பார்வையில் இது சித்திரவதையில்லை, பெண்ணின் அழகை மேம்படுத்தும் ஒரு செயல் - அவ்வளவே. சீனாவில் இவ்வழக்கம் ஒரு கலையாகப் பார்க்கப்பட்டு வந்துள்ளது என்பதை நினைக்கும்போது சமூகத்தில் ஆணின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணித்த பாதங்கள்

ஆதிக்கம் எந்த அளவிற்கு வேரூன்றி இருந்து வந்திருக்கிறது என்பது தெளிவாகப் புரியும். ஆணின் அழகியல் நோக்கே இவ்வழக்கத்திற்குக் காரணம் என்று தங்களை ஏமாற்றிக் கொண்டும் நம்பிக்கொண்டும், ஆணுக்கு அடிமையாக இருந்த இப்பெண்கள் மிக அதிகம் பயந்ததே பாதங்களைக் கட்டி நீளத்தைக் குறைக்கா விட்டால் தங்களுக்குத் திருமணமாகாது போகுமோ என்று தான். திருமணமாகாவிட்டால் ஒரு பெண்ணுக்கு வாழ்க்கையே இல்லை சீன சமூகத்தில். தன் கல்லறையைப் பராமரிக்க கணவனோ பிள்ளைகளோ இல்லாத அவள் இறப்பிற்குப் பிறகு அமைதியில்லாமல் வெட்டியாகத் திரியும் ஆவியாகிவிடுகிறாள் என்பது நம்பிக்கை. ஆக, திருமணத்திற்கு ஒரு முக்கிய தகுதியாகிப் போனது இந்த கட்டப்பட்ட பாதங்கள். காலம் காலமாக இவ்வழக்கம் வாழ்வின் ஒரு பகுதியாக சீனப் பெண்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றப்பட்டும் வந்துள்ளது.

ஆணை மகிழ்விக்கவே பெண் இருப்பதாகவும், அவனுக்குப் பிள்ளைகள் பெற்றுக்கொடுப்பதே அவளின் கடமையெனவும் தீவிரமாக நம்பப்பட்டது. ஆணின் இச்சைக்கும் வசதிக்கும் புலனின்பத்துக்கும் ஏற்றாற்போல் பெண் எல்லாவிதமான சித்ரவதைகளையும் அனுபவிப்பது என்பது அங்கு எழுதப்படாத சட்டமாக இருந்து வந்துள்ளது. தனக்கு இழைக்கப்பட்ட கொடுமையாகப் பார்க்கவே தெரியாமல் வாழ்ந்திருக்கிறார்கள் சீனப் பெண்கள். ஒரு பெண்ணின் உறுப்புகள் இயற்கையாக எப்படி இருக்கிறதோ அப்படியே ஏற்றுக்கொள்ளும் மனோபாவம் முற்றிலும் இல்லை. அவளின் ஒவ்வொரு உறுப்பும் வெவ்வேறு வகைகளில் குறைக்கவும் கூட்டவும் பட்டுவந்துள்ளது. முக்கியமாக பாதங்களைச் சிறியதாகக் காட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் கொடூரமானவை.

சீனமுதுமொழி ஒன்று "உன் மகனின் மேல் உனக்கு அக்கறையிருந்தால், அவனுடைய கல்வியைச் சுலபமாக்காதே. உன் மகளின் மேல் உனக்கு அக்கறையிருந்தால், பாதங்களைக் கட்டுவதைச் (foot binding) சுலபமாக்காதே", என்கிறது.

பெண் குழந்தைகளின் கால்விரல்கள் உடைக்கப்பட்டு, தோல் கீரப்பட்டு அவளின் கால்விரல் எலும்புகள் உள்ளங்கால்களை நோக்கி மடக்கிக் கட்டப்படுவதெல்லாம் மிகவும் சர்வசாதாரணம். சிறுமிகளின் பாதங்கள் சுமார் மூன்று முதல் பதினோரு வயதுக்கிடையில் கட்டப்படும். அவ்வயதில் எலும்புகள் இளசாக இருக்கும் என்பது ஒருகாரணம். சீக்கிரமே ஆரம்பித்தால் பலன் அதிகம். இதைச் செய்வது அவளின் தாயும் மற்றும் பெண் உறவினர்களும். குளிரில் பாதங்கள் கொஞ்சம் மரத்துப்போய் வலி குறைவாக உணரப்படும் என்று அவர்கள் இம்முறையை முதன்முதலில் நடைமுறைப் படுத்தியது கடும்குளிர்காலத்தில். உண்மையில் வலி என்னவோ கோடையில் இருக்கக்கூடிய அதே அளவு தான் இருக்கும். கிட்டத்தட்ட இரண்டாக மடித்துக் கட்டப்படும் பாதங்கள் மூன்றங்குலத்திற்கு மேல் இருக்கக்கூடாது. மடக்குவதால் குதிங்காலுக்கும் முன்காலுக்கும் இடையில் ஏற்படும் பிளவு குறைந்தது 2-3 அங்குல ஆழம் இருக்கவேண்டும். பாதங்கள் பெண்ணின் உடலைத் தாங்குவதைப் போலில்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவளின் கால்களின் நீட்சியாகவே தெரியவேண்டும் என்பது நோக்கம். அப்போது தான் ஆணுக்குப் பிடித்த தாமரைக் கொக்கிகள் உருவாகும்.

ஒரு சடங்காக நடத்தப்படும் இவ்வழக்கத்தில், முதலில் கால்விரல் நகங்கள் வெட்டப்படும். பிறகு எலும்பையும் தசையையும் மென்மையாக்க மூலிகைகள் போட்டுக் காய்ச்சிய சுடுநீரில் பாதங்களை ஊறவைப்பார்கள். சிலவேளைகளில் மிருகங்களின் ரத்தம், சிறுநீர போன்றவற்றிலும். கால்விரல்களில் கட்டைவிரல் மட்டும் வெளியே நீட்டிக்கொண்டிருக்கும்படி விடப்படும். மற்ற எட்டு விரல்களும் அடியில் தள்ளப்பட்டும் இறுக்கிக்கட்டப்படும். சிறுமி தன் முழு பாரத்தையும் கட்டப்பட்ட பாதத்தில் செலுத்தி நடக்கப் பழக்கப்படுகிறாள். இதன் மூலம் எலும்புகள் தானாகவே உடைந்து பாதம் மெல்லமெல்ல குட்டையாகி உருமாறும். வலியைப் பற்றியெல்லாம் முணுமுணுக்கவும் மாட்டார்கள். கூடவும் கூடாது. பிறகு, அவரவர் வசதிக்கேற்ப பத்தங்குல நீளமும் இரண்டங்குல அகலமும் கொண்ட பட்டு அல்லது பருத்தித் துணியால் பாதங்கள் இறுக்கிக் கட்டப்படும். பணக்காரர்கள் வெள்ளையிலும் ஏழைகள் அடர்நீலத்திலும் துணியை உபயோகித் தார்கள். அடர்நீல வண்ணம் அழுக்கை மறைக்க. அவ்வண்ணம் தோய்த்த துணி பாதங்களில் புண் ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கவும் உதவியதாக நம்பப்படுகிறது. இரண்டு நாட்களுக்கு ஒருமுறை கட்டு அவிழ்க்கப்பட்டு பாதங்கள் கழுவப்பட்டு நகங்கள் வெட்டப்படும். பிறகு,மீண்டும் முன்பைவிட இறுக்கமாகக் கட்டப்படும். ஆரம்பநாட்களில் தாய் இதைச்செய்வாள். பிறகு, தானே செய்துகொள்ளப் பழகவேண்டும். பாதத்தின் அளவு குறையக்குறைய காலணிகளின் அளவும் குறையும்.


மொத்த உடல் எடையும் கால்களில் இறங்கி கால் எலும்புகள் தானாகவே உடைந்து பிறகு மடக்கிய வாக்கில் படிந்து வளர உதவும் என்பதற்காக கட்டப்பட்டபாதங்களுடன் பெண்களை வேண்டுமென்றே நீண்டதூரத் துக்கு நடக்க வைப்பதுண்டு. செயற்கையான முறையில் பாதங்களில் மேல் எடையுள்ள பொருட்களை வைப்பதுமுண்டு. சிலவேளைகளில், கூர்மையான ஆயுதத்தால் பாதங்களின் தசைகளை குத்திக் காயப்படுத்தி அதிகப்படியான தசைகளை அழுகி உதிரச் செய்வார்கள். நாளடைவில் அவளின் இரு பாதங்களும் தாமரைக் கொக்கிகளின் உருவத்திற்கு மாறிவிடும். அப்போது தான் அப்பெண் உயர்ந்த அந்தஸ்தைப் பெறுகிறாள். பாதங்கள் மறைந்து மூன்றங்குல கொக்கிகள் மேல் நிற்கவும் நடக்கவும் செய்வாள். நடக்கவே சிரமப்படும் இப்பெண் ஓடுவதை நினைத்தும் பார்க்கமுடியாது. நொண்டிக் கொண்டும் நெளிந்து கொண்டும் நடமாடப்பழகிடுவாள். வேறு வழியி ல்லையென்றால் தூக்கிக்கொண்டு போவார்கள் பெண்களை. ஆணை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்விக்கவென்றே வளர்த்தெடுக்கப்பட்ட கலாசாரமான இப்பெண்களின் நுனிக்கால் நடனம் மிகவும் சமீபகாலம் வரையிலும் பிரபலம்.

இரண்டு வருடங்களில் சிறிய பாதங்கள் கிடைக்கப்பெற்றாலும், தொடர்ந்து பத்து வருடங்களுக்கு பாதங்களைக் கட்டினால் தான் இயற்கையாக வளரத் துடிக்கும் விரல்களையும் எலும்புகளையும் கட்டுப்பாட்டில் வைக்கமுடியும் என்பதால் கட்டுவது தொடரும். இயற்கைக்கு விரோதமான இவ்வழக்கத்தின் பின்விளைவுகள் ஏராளம். தாங்கமுடியாத வலி. மீண்டும் இயற்கையான பாதங்களைப்பெறுதல் என்பது கிட்டத்தட்ட சாத்தியமேயில்லாமல் போகிறது. தேவையான இரத்த ஓட்டம் இல்லாமல் விரல்கள் உதிர்ந்து கூடப்போய்விடும். மடக்கியிருக்கும் விரல்களில் வளரும் நகங்கள் அடிப்பாதங்களில் குத்தி புண்ணாகி நாற்றத்துடன் விடாமல் சீழ் வடியும். வாழ்நாள் முழுவதும் நாற்றம் அவளைவிட்டுப் போவதில்லை. இந்தப் புண் ஆறாமல் தொடர்ந்தால், கால் முழுவதும் பரவி சிலவேளைகளில் பெண்ணுக்கு மரணம் கூட நிகழ்வதுண்டு.

ஆணைவிட பெண்ணின் பாதம் சிறியதாக இருந்தாலும், அதனை மேலும் சிறியதாகக் காட்டவே வலியுறுத்தி வந்துள்ளது சீனச் சமூகம். நாடு முழுவதும் பரவலாகப் பின்பற்றப்பட்டு வந்து, சீனாவின் ஹான் வட்டாரத்தில் அதிகமாக இருந்த இவ்வழக்கம் இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் தான் மறையத் துவங்கியது. எனலாம். ஆச்சரியம் என்னவென்றால், இப்பெண்கள் வீட்டு வேலைகள் செய்யவும், நீண்ட தூரம் நடக்கவும் மலையேறவும் அஞ்சுவதேயில்லை. ஏற்று வாழப்பழகிய மனோபாவம் ஒரு காரணம் என்றாலும் தோல்வியை ஏற்கப் பிடிக்காத மனோதிடமும் இன்னொரு முக்கிய காரணம்; உடலில் ஏற்படும் வலிகள் மனதைத்



திடப்படுத்திக்கொள்ள உதவி வந்துள்ளதோ என்றெண்ணத் தோன்றுகிறது.

பெற்றோரிடமிருந்து பெற்ற நம் உடல் புனிதத்துவம் கொண்டது உடலுறுப்புகளை எந்தவிதத்திலும் மாற்றியமைக்கக்கூடாது என்று கன்ஃப்யூஷியஸ் சொன்ன முக்கியமான பாடத்தை சீனத்தில் ஆண்சமூகம் மிகச்செளகரியமாக மறந்தது. பிற்காலத்தில் எதிர்ப்புக்குரல் கிளம்பிய போதுதான் பெண்களுக்கு ஆதரவாக இதனைப் பயன்படுத்தினார்கள். அதே நேரத்தில், கன்ஃப்யூஷியஸின் ஆணாதிக்க போதனைகள் இவ்வழக்கத்திற்கு வித்திட்டதாகவும் பரவலாகச் சொல்லப்படுகிறது.

1997ல் கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்திலிருந்து விஞ்ஞானிகள் குழு ஒன்று சீனாவில் osteoporosis குறித்த விரிவான ஆராய்ச்சியின் ஒரு பகுதியாக இவ்வழக்கத்தின் பின்விளைவுகளை ஆராய்ந்தது. இந்த ஆய்வில் 193 பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## துளிப்பாவனம்

- நான் போக நீ வருவாய்
காவோலையின் அறிவுரை
புரியாமற் குருத்தோலை.

- இரவு முழுவதும் பாடல்
தொண்டை கட்டி மரணம்
தவளையின் விதி.

- பாலம் எதுவும் இல்லை
விண் மண்ணை இணைக்கும்
நேர் கோட்டு மழை.

- கொடுப்பது குற்றமா?
இரக்கமற்றுக் கொலை
குலையீன்ற வாழை.

- தாயின் வயிறு நிறைவு
சேய் அள்ளியள்ளி
உண்கையிலே
தொப்புள் கொடிபுறவு.

- நான் இனிச் செல்வந்தர்
சிறுமியின் மகிழ்ச்சி
தீபாவளிப் புதுச் சட்டை.

- கடற்கரையோர மணல்
செல்வர் காலுக்கு அப்பியாசம்
கல்மீது நடக்கும் ஏழைக்கு!

- **விக்னாபாக்கியநாதன்**

பங்கேற்றார்கள். 93 பேர் 80 வயதைக் கடந்தவர்கள். மற்றவர்கள் 70-79 வயதுடையவர்கள். கட்டி சிறிதாக்கப்பட்ட பாதங்கள் உள்ளோர் இயற்கையான பாதங்கள் உள்ளவர்களைவிட அதிகம் கீழே விழக்கூடியவர்கள். தவிர இந்தச் இப்பாதங்கள் கொண்டவர்களால் இருக்கையிலிருந்து எளிதில் எழமுடியவில்லை. இவர்களால் குந்தியிருக்கவும் சிரமம். சீனாவிலோ அன்றாட வேலைகள் செய்ய பெண்கள் குந்தியிருப்பது முடியாதது. சிரமத்துடனேயே வாழப்பழகிய இப்பெண்களுக்கு இடுப்பு மற்றும் முதுகெலும்புகளின் பலம் மிகவும் குறைந்து விடுவதால், இவர்களுக்கு எலும்பு முறிவு ஏற்படும் சாத்தியகள் மிகஅதிகம். கன்ப்?பூஷியஸ் வகுத்துத் தந்த கலாசாரம் உடல் முழுவதையும் மறைத்த ஆடை. அவரைப்பின்பற்றி தான் அறிஞர் ஜு ஜீ (1130-1200 கி.மு) தென் ப்யூஜியன் மாநிலத்தில் இவ்வழக்கத்தை ஊக்குவித்தார். பெண்களின் கட்டப்பட்ட பாதங்களையும் காலணிகள் கொண்டு முற்றிலும் மறைத்துக் கொள்ளும் பழக்கம் தோன்றியது. இது அவர்களுக்கு ஒருவித அடையாளத்தைக் கொடுத்ததென்றும் நம்பப்பட்டது. அவர்களைப் பொருத்தவரை, பெரிய, தட்டையான மற்றும் காலணியில்லாத பாதங்கள் விலங்குகளுக் குறியவை, பெண்களுக்கானதல்ல.

டாங்க் முடியாட்சியின் இறுதிலோ, அதனைத் தொடர்ந்த சுங்க் முடியாட்சியிலோ (960- 1279 கிபி) இவ்வழக்கம் துவங்கியிருக்கலாம் என்று கருதப்பட்டாலும் ஷாங்க் முடியாட்சியில் ( 1700- 1027 கிமு) தோன்றிய பலவகையான புராண மற்றும் இதிகாச, கிராமியப் பதிவுகள் இவ்வழக்கத்தினைப் பேசுவதால் அதன் பழமை புரிகிறது. அப்போது நாட்டின் அரசிக்கு இயற்கையாகவே சிறிய பாதங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததாகவும் அதற்காக நாட்டின் பெண்களும் பாதங்களைக் கட்டி சிறியதாக்கிக் கொள்ளவேண்டும் என்று ட்டளையிடப்பட்டதாக கதைகள் உண்டு.

பெண்கள் கால்களை மடக்கிக் கட்டி சிறிதாக்கிக்கொண்டார்கள். அதன்மூலம் அரசி தன்னை அழகின் இலக்கணமாக்கி மகிழ்ந்தாள். பெண்களே மனமுவந்து தன் குறைபாடுகொண்ட கால்களை நினைத்து வருந்திய அரசியின் உணர்வைப் புரிந்துகொண்டு அவ்வாறு செய்ய ஆரம்பித்ததாகவும் பதிவுகள் உண்டு. அதே காலத்தில் வாழ்ந்த லீ யூ என்ற இளவரசனுக்கு சிறிய பாதங்கள் மற்றும் நுனிக்கால் நடனத்தில் மிகுந்த நாட்டம் இருந்ததால் பாதங்களைக்குட்டையாக கிக்கொள்ள அவன் தன் அந்தப்புரப் பெண்களிடம் சொன்னான் என்றொரு கதையும் உண்டு. யாவ் நியாங் என்ற அவனின் மனைவியருள் ஒருத்தி அவ்வகைப் பாதங்களைக் கொண்டவள். நுனிக்கால் நடனத்தில் வல்லவள்.

பன்னிரெண்டாம் நூற்றாண்டின் இறுதியில் இந்தக் கொடிய வழக்கம் உச்சத்தை அடைந்தது. சுங்க் முடியாட்சியைக் கைப்பற்றிய முங்கோல்கள் யுவான் முடியாட்சியை நிறுவினார்கள். அவர்கள் பாதங்களை இறுக்கிக் கட்டும் இவ்வழக்கத்தினை ஆதரித்தனர். பிறகு, இவ்வழக்கம் அரசகுடும்பத்திலிருந்து மிங்க் முடியாட்சியின் போது மேட்டுக் குடியினரிடையே பரவியது. அப்போது தான் இவ்வழக்கம் திருமணத்திற்கும் அந்தஸ்துக்கும் தொடர்பு படுத்தப்பட ஆரம்பித்தது. மேட்டுக்குடிகளில் இருந்த பெண்கள் இவ்வழக்கத்தைப் பின்பற்றியதால் தான் சொகுசு வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்று நினைத்தார்கள் மத்திய கீழ்த்தட்டு மக்கள். தாங்களும் தங்கள் மகள்களுக்கு பாதங்களைக்கட்டி சிறிதாக்கிவிடலாம்,




ஹான்ஸ் மற்றும் மன்சுஸ் வட்டாரங்களை அடையாளம் காண அவ்வட்டாரப் பெண்களின் பாதங்கள் தான் உதவின.

போர்த் தந்திரமாகவும் இவ்வழக்கம் அமைந்ததற்கான பதிவுகள் இருக்கின்றன. ராணுவ ஆலோசகர் ச்சூ ஜ்யூசீ, பாதங்களை இறுக்கிக் கட்டும் வழக்கத்தை மேலும் ஊக்குவிப்பதன் மூலம் மன்சுஸ் இனத்தைக் கவிழ்க்கவும் சீனாவின் பலத்தைப் பெருக்கிக்கொள்ளவும் முடியும் என்று நினைத்தார். இதற்காக, ஹான்ஸ் வீரர்களைக் கொண்டே மன்சுஸ் வீரர்களிடம் இவ்வழக்கத்தைப் பரப்பப் பரிந்துரைத்தார். இதன் மூலம் அவ்வீரர்களின் கவனம் போரிலிருந்து வேறொன்றில் சிதறி, போர் ஆவேசம் குறைந்து, சீனாவுக்கு அவர்களால் ஏற்பட்ட அச்சுறுத்தல் குறையலாம் என்று கணக்குப் போட்டார். இருப்பினும், இவ்வழக்கம் மன்சுஸ் இனத்தாரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சீனர்கள் மட்டுமே தொடர்ந்து 1911 புரட்சிவரை பின்பற்றினார்கள்.

முதன்முதலில் 1895ஆம் வருடம் ஷாங்காயிலிருந்து எதிர்ப்புக்குரல் கிளம்பும் வரை எத்தகைய விழிப்புணர்வும் இல்லாமலே இருந்து வந்தனர் பெண்கள். பெண்ணின் கல்விக்கு இவ்வழக்கம் தடையாக அமைந்து வருவதை குடிமக்களுக்கு உணர்த்தி ஓர் இயக்கம் உருவானது. பாதங்கள் இறுகக் கட்டப்படாத பெண்களுக்கும் திருமணம் சாத்தியமே என்று செயல்முறையாகக் காட்டினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்மூலம் மேல்தட்டு சீமான்களுக்கு அவர்களைக் கட்டிவைக்கலாம் என்று நினைத்து தீவிரமாகப் பின்பற்ற ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால், அத்தகைய திருமணங்கள் எளிதில் நடந்துவிடவில்லை. பெரும்பாலான பெண்கள் வயல்களில் கடின வேலைக்குத் தான் போகவேண்டி வந்தது. இருந்தாலும் வழக்கம் தொடர்ந்தே வந்திருக்கிறது.

1664ல் ச்சிங்க் முடியாட்சியின் போது மன்னன் காங்ஸி இவ்வழக்கத்திற்கு தடைபோட நினைத்தான். துரதிருஷ்டவசமாக, அவனின் முயற்சிகள் எந்தப் பலனைக் கொடுக்கவில்லை. பெண்கள் பாதக்கட்டுகளை அவிழ்த்துவிடவும் ஆண்கள் (நீண்ட பின்னலை வெட்டி)மொட்டை அடித்துக்கொள்ள ஆணையிடப்பட்டது. தங்களின் நீளமான பின்னல்களை இழக்க ஆண்கள் தயாராய் இல்லை. இந்தத் தருணத்தில் கூட பெற்றோரிடமிருந்து பெற்ற உடலையும் உறுப்புகளையும் எந்தவிதத்திலும் மாற்றியமைக்கக்கூடாது என்ற கன்ஃப்யூஷியஸின் போதனையை ஆண்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளப் பார்த்தார்களே தவிர அப்போதும் பெண்களுக்காக அவர்கள் யோசிக்கவேயில்லை. அந்தக்காலகட்டத்தில், பாதங்களைக் கட்டும் இவ்வழக்கம் குறைந்தது போலிருந்தது. ஆனால், நான்கே ஆண்டுகளில் மீண்டும் தீவிரமாக நடைமுறைக்கு வந்துவிட்டது.

ஷென் தேஃபூ ( 1578- 1610 கி.பி) என்றவரின் வரலாற்றுப் பதிவின் படி 1644ல் மன்சூஸ் படைகள் நாட்டைக் கைப்பற்றியபோது மானத்திற்கு பயந்து மன்னன் தற்கொலை செய்துகொண்டான். அப்போது. திடீரென்று ஹான் இனமக்களிடையே நாட்டுப்பற்றையும் ஆண்களுக்கு அடையாளைத்தையும் ஏற்படுத்திடவேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. அப்போது கட்டப்பட்ட பாதங்கள் எல்லைகளைக்குறிக்கும் ஒன்றாகிப்போனது.

1911ல் சீனக் குடியரசு இவ்வழக்கத்தைச் சட்ட விரோதம் என்று அறிவித்தது. அரசு ஊழியர்கள் வழக்கத்தைப் பின்பற்றுபவர்களை அடையாளம் கண்டு அபராதம் விதித்தனர். இருந்தாலும், இந்தப் பழக்கம் உட்புற கிராமங்களில் தொடர்ந்தே வந்தது. இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் சிறிய பாதங்களுக்கான காலணிகளை உற்பத்தி செய்துவந்த ஹன்பின் என்ற ஊரில் இருந்த கடைசி தொழிற்சாலை இழுத்துமூடப்பட்டது.

கடந்த ஆயிரம் வருடங்களில் 4.5 பில்லியன் சீனப் பெண்கள் இவ்வழக்கத்திற்கு உட்பட்டுள்ளனர். வழக்கம் உச்சத்தில் இருந்தபோது அதைப்பற்றிய பதிவுகள் மிகக் குறைவு. மெதுவாகக் குறைய ஆரம்பிக்கும்போது தான் ஏராளமான பதிவுகள் இவ்வழக்கத்தைக் குறித்து சீன இலக்கியங்களில் கிடைக்கின்றன. அவற்றில் பெரும்பான்மையானவை கடந்த 2-3 நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட பாலியல் சார்ந்த பதிவுகளே.

ஹவாய் தீவுகளுக்குப் புலம்பெயர்ந்த சீனர்கள் இவ்வழக்கத்தைக் கொண்டு சென்றார்கள். பிறகு 1898ல் தடைசெய்யப்பட்டபோது கைவிட்டார்கள். இவ்வழக்கம் புலம்பெயர்ந்த மற்ற சீனர்களிடம் இருந்ததாகத் தெரியவில்லை. பாதங்கள் கட்டப்பட்ட பெண்கள் புலம் பெயர்ந்திருக்கலாம். ஆனால், புலம்புயர்ந்த மண்ணில் இவ்வழக்கத்தைத் தொடர்ந்ததற்கான பதிவுகள் இல்லை என்றே தெரிகிறது.

இன்று சீனாவில் இவ்வழக்கத்தினைப் பற்றி நன்கறிந்தவர்கள் மிகவும் குறைந்துபோனார்கள். கை வேலைப்பாட்டுடன் அமைந்த மூன்றங்குல பட்டுக் காலணிகளை சீன அரசாங்கம் அருங்காட்சியங்களில் எங்கேயும் வைப்பதில்லை. இக்காலணிகள் இப்போதெல்லாம் சீனர்களிடையே அவமானம், கோபம், எரிச்சல் மற்றும் வெறுப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற வெவ்வேறு விதமான உணர்வுகளைக் கொண்டுவருகின்றன. ந்யூயார்க்கில் 1996ல், 142 ஜோடிக் காலணிகள் காட்சிக்கு வைக்கப்பட்டபோதும், கடைக்காரர் அவ்வரிய காலணிகளை 975 டாலருக்கு விற்க முயன்றபோதும் ஏராளமான எதிர்ப்புகள் கிளம்பின. 1995ல் யாங்க் யூச்சிங் என்ற திரைப்படத்தயாரிப்பாளர் இவ்வழக்கத்தை- க்குறித்து ஒரு திரைப்படம் எடுக்க நினைத்தார். அவருக்கு அது சுலபமாக இல்லை.

ஏனென்றால், அதைப்பற்றிப் பேச யாரும் முன்வரவில்லை. சீன அரசாங்கம் தன் திரைப் படவேலையைத் தடைசெய்துவிடுமோ என்றும் அஞ்சியிருக்கிறார் யாங்க் யூச்சிங். ஆனால், சமீபத்தில் டிஸ்கவரி தொலைக்காட்சிக்கு திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

சீனாவின் பல்வேறு பகுதிகளில் கடந்த ஒரு நூற்றாண்டில் பெண்கள் அமைப்புகள் பல இம்முறைக்கு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. தங்கள் மகள்களையாவது இதிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று நினைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். பாதங்களை இறுக்கிக்கட்டும் இம்முறைக்கு எதிராக நடந்த இயக்கங்கள் நல்ல வரவேற்பைப்பெற்றுள்ளன. நிறைய பெண்கள் உடனே பாதக்கட்டுகளை அவிழ்த்து எறிந்துவிட்டு மற்றவர்களையும் அவ்வாறே செய்யத் தூண்டினர். கட்டில்லாமல் நடப்பது மிகவும் வலியைக் கொடுக்கும் என்பதால், கட்டினைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தான் தளர்த்தி இயல்புக்கு வரவேண்டும் என்று இவர்கள் பரிந்துரைக்கப் பட்டிருக்கிறார்கள். வயதில் முதிர்ந்த பெண்களுக்கு வேறு வழியே இல்லை. பாதங்கள் இயல்புக்கு வரவேமுடியாது.

**- ஆகஸ்ட் 2006 - உயிர்மை**


# Jaffna House

**Srilankan/Indiyan Restaurant**
**&**
**take away**

**(fully licensed & air-conditioned restaurant)**

**All parties & wedding are catered at special discount price**



**Jaffna House**

**90, High Street**
**Tooting Broadway,**
**Tooting**
**London**
**Sw 17 0RN**
**Phone-0208 6727786.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரத்தில் தோல்வியடைந்த

1

ஐந்தாவது மாடிக்குச்
சென்றால்தான் தற்கொலை
செய்து கொள்ள முடியும்.


நகரத்தில் அல்லது
நகரத்து வீதியில்
துடிதுடித்து இறப்பதற்கு
கொஞ்சம் சாமர்த்தியம்
வேண்டியிருந்தது.

ஐந்தாவது மாடியிலிருந்து
வீழ்ந்து மரணித்தால்தான்
நகரத்திற்கு ஏற்புடைய
ஒரு தற்கொலை நிகழும்.

அவ்வளவு உயரமான
மாடிக்குச் செல்வதென்றால்
எனக்குச் சில அடையாளங்கள்
தேவைப்பட்டன.

அடையாளம் 1
நான் அந்த ஐந்தாவது
மாடியில் வேலை செய்பவனாக
இருக்க வேண்டும்.

அடையாளம் 2
அங்கு வேலை செய்யும்
ஊழியருக்கு உறவினராக
இருக்க வேண்டும்.



அடையாளம் 3
அலுவலக முதலாளிக்கு
நண்பராக இருக்க வேண்டும்.

அடையாளம் 4
குறைந்தபட்சம்
ஏதாவது ஒரு காரணமிருக்க
இருக்க வேண்டும்.

இத்துடன்
தற்கொலை முயற்சி
தோல்வியடைந்தது.

2

மேம்பாலத்தின் விளிம்பிலிருந்து
தவறி விழுவதை
ஒரு தற்கொலையென
பாவித்துக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்து வீழ்ந்தால்
ஏதாவது ஒரு வாகனத்தில்
சிக்கிக் கொண்டு
துயரமற்று சாகலாம்.
மேம்பாலம்வரை வந்துவிட்டேன்.

கீழே
அரசியல் பேரணி
நடந்துகொண்டிருந்தமையால்
இத்துடன்
தற்கொலை முயற்சி
தோல்வியடைகிறது.

3

சாலையோரத்தில்
வருவோர் போவோரிடம்
கேட்டுப் பார்த்தேன்
என் தற்கொலைக்கு
ஒரு காரணத்தை.

சிதைவது கொடுமையென்றார்கள்
சரி சிதையுங்கள் என்றேன்.
சிதைப்பது தற்கொலையாகாது
என்று புரிய வைத்தார்கள்.

எல்லோரிடத்திலும்
ஒரு சிதைவு இருந்தமையால்
சிறுகச் சிறுக சிதைவதை
எதிர்க்கும் ஒரு மாபெரும்
பலவீனம்
தற்கொலை என்றதும்
இத்துடன் தற்கொலை முயற்சி
தோல்வியடைகிறது.

4

சப்தமின்றி ஒரு தற்கொலை
நிகழ வேண்டுமென்றால்
மௌனத்தால் நிரம்பிய
ஒரு வெளி
அமைய வேண்டும்.

அங்கு இதற்கு முன்
வாழ்ந்தவர்களின் சொல்லப்படாத
சொற்களால் ஒரு பெருஞ்சுவர்
எழுப்பப்பட்டிருக்க வேண்டும்.

சுவரிலிருந்து ஒழுகும்
இயலாமைகளையும் வலிகளையும்
அள்ளிப் பருகி
சொற்களால் ஆன
பூத உடலைச் சிதைக்க வேண்டும்.
இப்பொழுது சப்தமின்றி
ஒரு தற்கொலை
சாத்தியமாகலாம்.
அல்லது வரலாற்றில்
எப்பொழுதும்
ஒரு நத்தை மிக தாமதமாக
சில சொற்களைச் சுமந்து
கொண்டு வந்து சேர்வது
சாத்தியமென்றால்
மீண்டும்
தற்கொலை முயற்சி
தோல்வியடைகிறது.

**சில தற்கொலை முயற்சிகள்**

- **கே.பாலமுருகன் (மலேசியா)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி ஆய்வு

# வட மொழியில் தமிழ் சொற்கள் கலக்காதது ஏன்?

பாக்கியநாதன்

ஐரோப்பிய அறிஞர்கள் மொழிகளை அடிப்படையாகக் கொண்டு துருக்கி - ஈரானியர், இந்திய - ஆரியர், சிந்திய - திராவிடர், ஆரிய - திராவடர் (இந்துஸ்தானியம்), மங்கோலியத்திராவிடர் (வங்காளியர்) மங்கோலாய்ட், திராவிடர் என வகைப்படுத்தியிருப்பினும் இந்திய மொழிகளை திராவிட மொழிகள், ஆரிய திராவிட மொழிகள், ஆரிய மொழிகள் எனப் பகுப்பதே மொழியாராய்ச்சிக்கு ஏற்றதாகும் எனச் சில ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். உலக மொழிகளுள் தமிழ் உட்பட சீனமொழி மிகப் பழைமையானது. சீனா, கம்போடியா முதலிய இடங்களில் உள்ள மொழிகள் சீன மொழியின் உறவு மொழிகள் எனப்படும். இந்த மொழிகளை அன்னாமியினம் என அழைப்பர். பின்லாந்து முதல் கிழக்கு இரசியா வரை வழங்கும் மொழிகள் இந்திய மொழிகள் எனப்படும். துருக்கியிலிருந்து இரசியா வரை வழங்கும் மொழிகள் துரானிய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகள் எனப்படும். சம்ஸ்கிருதமும் அதனைச் சார்ந்த வட இந்திய மொழிகள் கிரீக், லத்தீன், யேர்மன் மொழி, பிரஞ்சு மொழி, ஆங்கிலம், வேல்ஸ் மொழி முதலிய ஐரோப்பிய மொழிகள் ஆரிய மொழியினம் ஆகும். பாபிலோனியம், யூதமொழி, கீபிரு மொழி முதலியன செமிட்டிக் இனம் என்றும், யப்பான் மொழி ஒரு தனியினமாகவும் பாகுபடுத்தப் பட்டுள்ளன.

ஐரோப்பக் கண்டத்தின் ஒரு பகுதியாகிய இசுக்கண்டிநேவியம் (ஸ்கண்டிநேவியா) என்ற இடத்திலிருந்து 'ஆரியர்' என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் பல்வேறு திசைகளுக்கும் பரவினர். அவர்களுள் ஒரு பகுதியினர் மத்திய ஆசியாவின் மேற்கில் உள் துருக்கிஸ்தானியம் என்ற இடத்தில் தங்கினர். பின்பு கைபர்கனவாய் வழியாக இந்தியாவுக்கு வந்தனர். இவ்வாறு ஆரியர்கள் பிரிந்து பிரிந்து பல இடங்களில் வாழ்ந்ததால் ஆரிய மொழி பல்வேறு வகையினவாகப் பரந்தன. அவை இலத்தீன், கிரேக், சம்ஸ்கிருதம், எமிரேயம் என்பனவாகும். இவர்களுள் சம்ஸ்கிருதம் ஆரியரே இந்தியாவுக்கு வந்தனர். இவர்கள் இந்துஸ்தானத்தில் வாழ்ந்த தமிழர் களையும் துரானியர்களையும் துரத்தி அவ்விடங்களிற் தாம் வாழ்ந்தனர்.

ஆரியர்களின் வருகைக்கு முன்னரே தமிழர் அரபிக் கடல் வழியாக வாணிகம் செய்தனர். மயிலைக் குறிக்கும் 'தோகை' எனும் சொல் எபிரேய மொழியில் 'துக்' என வழங்கிவருதல் தமிழரின் அன்றய வணிகச் சிறப்புக்குச் சான்றாகும். கி.மு.



500க்கு முன்னரே எகிப்தியத் தொடர்பின் பின்னர் பேச்சு மொழியில் வழங்கிய தமிழ் மொழி, எழுத்து வடிவம் பெற்றது என்பர். ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்பே தமிழர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியும். எழுத்து, சுவடி போன்ற சொற்கள் அக்காலத்தில் தோன்றி இன்றுவரை வழங்கும் தனித்தமிழ் சொற்களாகும்.

ஆரியரும் தமிழரும் ஒரே நாட்டில் வாழவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தமை யால், ஒருவர் மொழியை ஒருவர்கற்கத் தொடங்கினர்.

ஏற்கனவே வாழ்ந்த குடிகளைக் காட்டு மிராண்டிகள் என்றும் தூற்றும் இயல்பினர் ஆரியர்கள். வரலாற்றாசிரி யர்களும், இவற்றை உண்மையெனக் கருதி மயங்கி வரலாற்றிலே பல குழப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையைப் பதிவு செய்தனர். இன்று ஆரிய நாகரிகத்தின் ஈவுகளாகக் கருதப்படும் மருத்துவக்கலை, போர் கலை, ஆடை அணிகலன், உணவு, திருமணம், இல்வாழ்க்கை முதலியன ரோமரும் கிரேக்கரும் பாரசீகரும் அறியாதவை. திராவிடருக்கே உரியவை. இவற்றைவிட மொழித்துறை, ஒலிகள், செயலமைப்பு முறை, இலக்கணக் கூறுகள்,இலக்கியத்துறைகள் யாவற்றையும் திராவிடர்களிலிருந்தே ஆரியர்கள் கற்றறிந்தனர் என்ற கருத்து ஆய்வாளரிடையே உள்ளது. இந்தியாவுக்கு வந்த ஆரியர் இந்தியாவில் வாழ்ந்த திராவிடருடன் முதன்முதலில் சிந்து கங்கைக் கரையிலே கலந்து வாழத்தொடங்கவே மொழிக் கலப்பு ஏற்பட்டது. ஆரிய - திராவிடச் சொற்கள் கலக்கவே புது மொழிகள் பிறந்தன. பிராகிருதம், பாலி என்பன இவ்வாறாகப் பிறந்த மொழிகளாகும். இவற்றிலிருந்து திரிந்து திரிந்து ஒலியமைப்பு மாறி பேசும் வெவ்வேறு மொழிகளாக இந்தி, வங்காளி போன்ற மொழிகள் தோன்றின. இம்மொழிகளில் திராவிட மொழிக் கூறுகள் உள்ளன என ஆய்வாளர் ஒப்புக் கொண்டுள்ளனர். மேற்கூறிய மொழிகள் வடமொழிச் செல்வாக்கை அதிகம் பெற்றுக் கிளைத்தெழுந்தன. தமிழ் மொழியிலிருந்து கிளைத்த மொழிகளாக தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு என்பன குறிப்பிடத்தக்கவை. பின்பு தெலுங்கு வடமொழியுடன் கலந்து தன் வரி வடிவத்தை மாற்றி, வடமொழி இலக்கணத்தையும் தழுவிக்கொண்டது.

வடமொழியார் தமிழர் பழக்க வழக்கங்களை அறிந்து வியந்து நாட்டம் கொண்டு அவற்றை வடமொழியில் நூல்களாக இயற்றினர். அத்துடன் சமய நெறியுணர்வும் கலையுணர்வும் மிக்கவர்களாகத் திகழ்ந்து தமிழரின் புண்ணியத் தலங்களுக்குப் புராணங்கள் பாடினர். என்றுமே இல்லாதிருந்த அந்தணர், அரவர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைச் சாதிய முறையை மெல்ல மெல்லத் தமிழரிடையே புகுத்தினர். மற்றும் தமிழரிகளுக்கு அமைச்சர்களாகவும் ஆலோசகர்களாகவும் பிரபுக்களாகவும் பணியாறித் தமிழர்களிடமிருந்து பல அரிய விடயங்களைத் தமது மொழியில் மொழிபெயர்த்து, தமிழர் அறியும் முன்பே அவற்றைத் தாமறிந்தவர்கள் போல வடமொழியில் எழுதி வைத்தனர். அவ்வாறாக வடமொழியில் உள்ளவற்றை வடமொழி தெரிந்த தமிழரே அவற்றைத் தமிழ்மொழிக்கு மாற்றினர். இதனால் இவை வடமொழி கருத்துகள் சிந்தனைகள் எனப் பின்வந்த சில அறிஞர்களால் தவறாகக் கூறப்பட்டன.

தமிழ் மக்களிலே சாதாரண பொதுமக்கள் வடமொழிக்கு இசைந்து அதைப் பேசினர். ஆனால், சாதாரண பாமர மக்கள் வடமொழிக்கு ஆதரவு கொடுத்தமையால் வட சொற்கள் மெல்ல மெல்லத் தமிழ் மொழியில் இடம் பிடிக்கத் தொடங்கின. இவ்வாறு வடமொழி தமிழ்மொழிக் கலப்பு ஏற்பட்டபோதும் தமிழ் மொழியில் வடமொழி சொற்கள், கலந்தது போல் வடமொழிக்குள் தமிழ்ச் சொற்கள் கலக்கவில்லை. இதற்குக் காரணம் என்ன? தக்க காரணங்களினின்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலைமை ஏற்பட்டிருக்க முடியாது. அதாவது தமிழ்மொழியில் வடமொழிச் செல்வாக்குப் பெற்று கலப்பதற்கு முன்பே இந்த வடமொழி பேச்சு வழக்கு இழந்து வெறும் ஏட்டு மொழி (எழுத்துமொழி) நிலைக்கு வந்துவிட்டது. ஆனால், தமிழ் மொழியோ ஏட்டுமொழி, பேச்சு மொழி என்ற இருவகை வழக்கும் உள்ள, இருதன்மையிலும் சிறப்புடன் வழங்கியது. பொதுவாக ஏட்டு வழக்கு மட்டும் உள்ள மொழி இருவகை வழக்கும் உள்ள எந்த ஒரு மொழியுடனும் கலக்குமேயானால் (எழுத்துமொழி) ஏட்டு மொழியில் வழங்கும் மொழியின் சொற்கள் இருவகை வழக்கும் உள்ள எழுத்துமொழியுடன் இணையும் வாய்ப்பு உண்டு. பேச்சு வழக்கும் இன்னொரு மொழியின் பேச்சு வழக்கும் கலக்கும்போது அவை அன்றாடம் பிறந்து அன்றே மடிந்து விடுகின்றன. எனவே, பேச்சு வழக்கிழந்து ஏட்டுமொழியாக இருந்த வடமொழியில் தமிழ்ச் சொற்கள் போய்ச் சேர முடியவில்லை. பேச்சு வழக்கு மொழிகளே திருத்தம் பெற்று எழுத்து மொழிநிலையை அடைகின்றன. இது பொதுவாக மொழிக்குள்ள இயல்பு! தமிழுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியரோ வடமொழிச் சொற்களை இயற்சொல்லுடன் கலக்காமல் வடசொற்கள், திசைச் சொற்கள் எனத்தனியாக இலக்கணம் வகுத்துள்ளமை தமிழ் மொழியின் தனித்துவத்தை எவ்வாறு பேணிக்காத்தனர் என்பதற்கு தக்க சான்றாகும்.

**இயற்சொல் திரிசொல் திசைச்சொல்**
**வடசொல்லென்று அனைத்தே செய்யுளீட்டச்**
**சொல்லே**

என்பது தொல்காப்பியனார் வகுத்த விதி.

## எல்லோரும் தோய்ந்த கங்கை எங்கள் மகாஜன மங்கை

சைவம் வளரவும் தமிழ்மொழி தழைக்கவும்
செய்ய கல்வியில் தமிழர் சிறக்கவும்
**பேரார் பாவலர் துரையப்பா பிள்ளை**
தூர நோக்குடன் துணிந்து நிறுவிய
சொல்லரும் மகாஜனக் கல்லூரி நூற்றாண்டு
வல்ல விழாவொரு வரலாற்று வைபவம்!

தொடர்ந்த வரலாற்றுப் பாதையிற் சுவடுகள்
படர்ந்தெழப் பாங்குடன் பதித்தவர் வரிசையில்
தோன்றுவர் முதலிலே து.ஜெய ரத்தினம்
ஆன்றவர் அறிஞர் அழகர் ஆற்றலார்
தந்தையின் கனவதைச் சிந்தையில் தாங்கிய
மைந்தரின் பணிகளால் வளர்ந்தது கல்லூரி!

திட்ட மிட்ட கல்விச் சிறப்புடன்
கட்டுப் பாடு கண்ணியம் கதிதரும்
சமய ஒழுக்க நெறியும் சால்புற
அமையும் ஆளுமை மாணவர் ஆண்டுகள்
தோறும் வெளிவந் துயர்வைத் துலக்கினர்
பேறிங்கு கற்றல் என்னும் பெருமையால்
மற்றுள ஈழத்து மாணவர் தாமும்
கற்றிட நாடும் கல்லூரி யானது!

எழுதிய தேர்வுகள் ஈட்டிய சித்திகள்
விளையாட்டுப் போட்டிகள் சூட்டிய வெற்றிகள்
நாடகப் போட்டிகள் நாட்டிய சாதனை
ஈடிணை யற்றவை ஏமுறப் பெற்றவை!

பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேச நன்மைக்குச் செய்யும் தொண்டுகள்
தொல்லை துயர்களைக் கடந்து தொடர்ந்திட
வல்ல வெண்பதை வரைந்து காட்டியே

எல்லோரும் நாடி இன்புறத் தோய்ந்து
வல்லாள ராக வகைசெய்த கங்கை
எண்ணையும் எழுத்தையும் கண்ணெனப் போற்றி
மண்ணினில் வளர்ந்த மகாஜன மங்கை
எதுவழி என்றே ஏங்கிய பலர்க்குக்
கதியினை அளித்த கலங்கரை விளக்கம்

வாழ்க வாழ்க பல்லாண்டு வாழ்க
ஏழ்கடல் வைப்பினும் இமயத்தின் உச்சியில்
தோன்றும் கதிரவன் சுடரொளி போலவெஞ்
ஞான்றும் வாழ்கென வாழ்த்துவம் நாமே!

**- வி. கந்தவனம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதே முட்கம்பிகள் அதே பயங்கரம்




-ழ.தீபச்செல்வன்

எல்லா அறிவிப்புகளும்
முடிந்துவிட்டன.
செய்திகளும் புகைப்படங்களும்
எல்லோரையும்
நம்பவைத்து சென்றுவிட்டன.
அதே முட்கம்பிகளுக்குள்
அம்மாவின் முகம்
சுருங்கிக்கிடக்கிறது.
தங்கையின் கூந்தல்
வளராமலிருக்கிறது.
எங்களுக்கிடையில் அதே
முட்கம்பிச் சுருள்கள்
அம்மாவின் அருந்திக்கொண்டு
வந்த புன்னகையை
காயப்படுத்திக்கொண்டிருக்கிறது.
தங்கையின் கையிலிருக்கிற
புத்தகத்தை
கிழித்துக்கொண்டிருக்கிறது.
எனக்காக அம்மா பிட்டினைச் சுமந்து
வந்தாள்.
காத்திருப்பின் எல்லைகளை
வீடு செல்லுகிற கனவினை
நகரத்திற்கு மீள்கிற
நம்பிக்கையை
அம்மா முட்கம்பிகளில்
சொருகியிருக்கிறாள்.
நுளம்புகள் கூடாரத்தை தூக்கிச்
செல்லும் இரவில்
முட்கம்பிகளில் மின் விளக்குகள்
பொருத்தப்பட்டிருக்க
காலாவதியான அதே கூடாரத்திற்குள்
கால்களை மடக்கி அம்மா அடைந்து
கொள்கிறாள்.
நீண்ட தூரத்திலுள்ள நகரத்தின்
கடைக்குச் செல்லுவதற்காக
அம்மா கோரிய அனுமதி
மறுக்கப்பட்டிருக்கிறது.
நெருங்கவும் தழுவிக்கொள்ளவும்
அனுமதிக்கப்படாத
வாசலில் முகாங்கள் என்றோ
திறந்துவிடப்பட்டன
என்று எழுதப்பட்டுள்ளன.
முகாங்கள் திறந்து
விடப்பட்டதற்காக
பத்திரிகையில் எழுதப்பட்ட
நன்றிகளை நான் உட்பட பலர்
வாசித்துக்கொண்டிருக்கிறார்கள்.
முட்கம்பிகளைப்பற்றியும்
கூடாரங்களைப்பற்றியும் நிறையவே
பேசி விட்டோம்.
எல்லா அறிவிப்புகளும்
போராட்டங்களும் முடிந்துவிட்டன.
நான் எப்பொழுதும்
சொல்லிக்கொண்டிருக்கும்
அந்தப் பயங்கரமான
முட்கம்பிகளால்
சூழப்பட்ட வேலிகளுக்குள்
குழந்தைகள் விளையாடுவதைக்
கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இப்படிக்கு உங்கள் சகோதரிகள்

அன்பான நட்புக்களே,
ஆர்வமுள்ள சொந்தங்களே,
எங்கள் தேசத்தின் உறவுகளே,
எங்களது துயரங்களை எழுதுகிறோம்.
இல்லை...... இல்லை..........,
பெண்களது துயரங்களை
எழுதுகின்றோம்.

தாலி கட்டி விட்டுப் போனவர்கள்
வாழுகின்ற நாடுகளின்
பெயரைச் சொல்லுங்கள்.

போலி முகங்களுடன்,
புது மாப்பிளைகளாகி
மீளவும், தாலி கட்டிப் போனவர்கள்
வாழுகின்ற இடங்களைச்
சொல்லுங்கள்.

என்,
பாசமுள்ள அம்மாவுக்காக
அவளைப் பார்க்காமலே
தாலி கட்டியவன் நான் என்று
தத்துவங்கள் பேசுகின்ற
பாதகர்களைப், பிடித்து
வாருங்கள்.

வாழ... வந்த மனைவி
வெந்து... வெந்து அழுவதை

ஆசையுடன் பார்த்து மகிழும்
ஆடவர்கள் கால்பதிக்கும் இடமெங்கும்
நெருப்புக் கொப்பளிக்கும் என்று
சொல்லுங்கள்.

தந்திரமாய்,
பெண்களையும்,
பெண் பெற்ற குடும்பங்களையும்
ஏமாற்றும் வித்தைகள்
எங்களிடம் உண்டு என்று
எண்ணுகின்ற.......

எண்ணி எண்ணி ஏமாற்றுகின்ற
வஞ்சகர்களின் நெஞ்சுக்குள்
நஞ்சு நிறைந்து
கொல்லும், என்று
சொல்லுங்கள்.

இன்னும்,
பல விடயங்கள்
சொல்வதற்கு உண்டு எனினும்,
இத்துடன் முடிக்கின்றோம்.
மற்றையவை மறு
'காற்று வெளி'யில் தொடரும்

இப்படிக்கு,
உங்கள் அன்புச்சகோதரிகள்


-சுரபி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறுகின்ற வன்முறை

இளைய அப்துல்லாஹ், லண்டன்.



# ஆண்களை அடிக்கும் பெண்கள்...

நேற்றுத்தான் எனது நண்பர் ஒருவருடன் எங்களுடைய மனைவிமாரைப் பற்றி கதைத்துக் கொண்டிருந்தேன். தங்களது முழு வாழ்க்கையையும் குடும்பத்துக்காகவே உழைத்து உழைத்து ஓடாகிப் போனவர்கள் அவர்கள்.

உண்மையில் இலங்கையில் ஆண்கள் என்ன செய்கிறார்கள் உழைத்துவிட்டு பணத்தை கொண்டு வந்து கொடுக்க அதனை சிக்கனமாக சேமித்து கணவரையும் பிள்ளைகளையும் எமது மனைவிமார்கள் தான் வளர்த்தெடுக் கிறார்கள்.

அன்பு மிளிர குடும்பத்தை கவனிக்கிறார்கள். அந்தக் கலாச்சாரம் உலக நாடுகளில் எப்படி மாறிக் கொண்டு போகிறது என்பதனை கண் முன்னால் கண்டு கொண்டிருக்கிறோம்.

குடும்ப அமைப்புகள் தொடர்பாக பல வில்லங்கமான கேள்விகளுடனேயே தற்போதைய இளைஞர்களும் யுவதிளும் இருக்கிறன்றனர். அதிலும் சிலோன், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய எமது ஆசியப் பக்கத்தில் இருந்து வந்து இங்கு லண்டனின் வாழுகின்ற குடும்பங்கள் மிகவும் அல்லாடித்தான் போகின்றன.

ஒரு சுமுகமான குடும்ப அமைப்பைக் கொண்டு போக முடியாமல் தடுமாறிப் போகின்றனர். அதற்கு கலாச்சாரக் கலப்பு ஒரு காரணமாக இருக்கலாம்.

எனக்கு தெரிய இரண்டு கொலைச் சம்பவங்களை இங்கு வெள்ளை க்காரர்களே அதிர்ந்து போய் பார்த்தார்கள். இரண்டும் பாகிஸ்தான் முஸ்லிம்கள் செய்தது.

மிகவும் இறுக்கமான இஸ்லாமிய மார்க்க பற்றுடன் இருக்கும் பாகிஸ்தா னியர்கள் மத்தியில் காதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. அதையும் மீறி பிள்ளைகள் காதலில் விழுந்து விட்டால் அது ஹராம் என்பதோடு பிள்ளைகளை துன்புறுத்தவும் செய்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தான் வாழ்க்கை ஆங்கில வாழ்க்கையோடு கலக்கும் போது ஏற்படும் அபாயம் இது. தமது பெண் பிள்ளை காபிர் (முஸ்லிம் அல்லாதவர்) ஒருவரை காதலிக்கிறாளே என்பதற்காக இரண்டு பெண் பிள்ளைகளை அவர்களது பெற்றோரே அடித்துக் கொன்றுவிட்டார்கள்.

"அல்லாஹ்விடம் நாங்கள் கணக்கு கொடுக்கிறோம் நீங்கள் செத்துப் போங்கள்." என்பதுதான் அவர்களின் வாதம். இந்தக் கொடுமையைப் பார்த்து பிரித்தானியாவே அதிர்ந்து போய்விட்டது.

இது புலம் பெயர்வினால் ஏற்படும் கலாச்சார, மத, மனப் பிறழ்வுகளுக்கு முக்கிய சம்பவங்கள். "துஷ்பிரயோகம் செய்யப்படும் ஆசிய ஆண்கள்; நரகத்தில் வாழ்கிறார்கள்" என்று அண்மையில் ஒரு தலையங்கத்தை எழுதியிருந்தது.

அதிகமான தெற்காசிய ஆண்கள் கலியாணத்துக்கு பிறகு வீட்டு வன்முறைகளால் பெரிதும் பாதிக்கப் படுவதாக லண்டனில் ஒரு புள்ளி விபரம் தெரிவிக்கிறது.

பொதுவாக பாகிஸ்தான், பங்களா-தேஷ் ஆண்கள் தான் இந்த டொமஸ்ரிக் வயலன்ஸ் என்கின்ற வீட்டுவன்முறைக்கு ஆளாகின்றனர். அதில் சிலோன்க்காரரும் இந்தியரும் கூட இருக்கின்றனர் என்பதுதான் முக்கியமான செய்தி.

கணவன்மாரை பெண்கள் அதாவது மனைவிமார் அடித்து உதைக்கிறார்கள். ஆனால் அதே கணவன்மாருடன் செக்ஸ் வைத்து பிள்ளைகளையும் பெற்றுக் கொள்கிறார்கள். வீட்டு வன்முறை பற்றிய முறைப்பாடுகளில் ஆண்கள் பெண்களை அடிக்கிறார்கள் என்ற முறைப்பாடுதான் முதலில் அதிகமாக வரும். ஆனால் இப்பொழுது பெணகள் ஆண்களை அடிக்கிறார்கள் என்பது சாதாரணமாக வருகிறது என்கிறார்கள் அதிகாரிகள்.

இங்கே பிரித்தானியாவில் இயங்கு கின்ற "த நேஷனல் மென்ஸ் அட்வைஸ் லைன்" என்றொரு அமைப்பு இருக்கிறது. தொலைபேசியில் பாதிக்கப்பட்ட ஆண்களுக்கான ஆலோசனைகளை வழங்கும் பிரிவு இது.

எல்லா வகையான அட்வைஸும் இங்கு வழங்கப்படுகிறது. குடி, சிகரட், ஹெரோயின் நிற்பாட்டுதல். வன்துறை தொடர்பாகவும் ஆலோசனைகள் வழங்கப்படும். இந்த தொலைபேசி லைனுக்கு 9 விதமான கோல்கள் மனைவி தங்களை அடித்து உதைப்பதான முறைப்பாடுகளை ஆண்கள் செய்கிறார்கள். இதில் பலர் பாகிஸ்தானையும், பங்களாதேசையும் சேர்ந்தவர்கள் என்கின்றனர் அலுவலர்கள்.

ஒரு சம்பவம் நடந்தது இங்கு ஜோக் செயார் பகுதியில். பாகிஸ்தானைச் சேர்ந்த இளைஞன் ஒருவர். அவருக்கு 30 வயது. அவருடைய அம்மா லண்டனில் அவரது உறவுக்கார பெண் ஒருவருக்கு திருமணம் செய்து வைக்க ஆசைப்பட்டார். மாப்பிள்ளையின் பெயர் முஹமட் (பெயர் மாற்றப்பட்டுள்ளது). ஆனால் முஹமட்டுக்கு லண்டன் என்றவுடன் ஒரு ஆசை வந்தது. அதுவும் உறவுக்கார பெண் என்றவுடன் ஓகே என்று சொல்லிவிட்டார்.

ஆனால் கலியாணம் முடித்தாலும் தனது டிகிரியை பாகிஸ்தானில் படித்துக் கொண்டிருப்பதனை முடித்து விட்டுத்தான் இங்கு லண்டனுக்கு வந்து வாழ்க்கையை சந்தோசமாக ஆரம்பிப்பதாக சொன்னார். மணப்பெண்ணும் ஒப்புக் கொண்டார். வீட்டாரும் ஒப்புக் கொண்டார்கள்.

மணப் பெண் இங்கு இங்கிலாந்தில் பிறந்து வளர்ந்தவள். இங்கு படித்தவள். சரி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியாணம் பாகிஸ்தானில் வைத்து அமர்க்களமாக முடிந்தது. எல்லோருக்கும் சந்தோஷம்.

மனைவி பாகிஸ்தானில் இருந்து இங்கு வந்துவிட்டார், இங்கிலாந்துக்கு, இடைக்கிடை தொலைபேசி பேச்சு வார்த்தை புருஷனுக்கும் பெண்சாதிக்கும் இடையில் நடந்தது.

ஒரு நாள் இரண்டு கிழமை லீவு கிடைத்தது. புருஷன் பாகிஸ்தானில் இருந்து மனைவியோடு இருந்து விட்டுப் போக வந்தார். வந்ததுதான் வந்தார் அன்றோடு அவரின் வாழ்வு தொலைந்தது. இரண்டு கிழமை நன்றாக ஆட்டா மாவில் ரொட்டி சுட்டுக் கொடுத்து கவனித்தார் மனைவி. வெளியில் கூட்டிக் கொண்டு போனார். செக்ஸும் வைத்துக் கொண்டார்.

பிரச்சனை அவர் பாகிஸ்தான் திரும்பிப் போகிற அன்று இரவு ஆரம்பமானது. பாஸ்போட்டை எடுத்து ஒளித்து வைத்து விட்டு மனைவி சண்டை பிடித்திருக்கிறார். உனக்கு படிப்பு முக்கியமில்லை; இங்கு இரு போதும் என்றார். வாய்த்தர்க்கம் வர கட்டிலில் தள்ளி வீழ்த்தி கைகளால் சரமாரியான அடி புருஷனுக்கு. போதாதற்கு மனைவியின் அண்ணணும் வந்து அடித்திருக்கிறார்.

சரி லண்டனில் இவ்வாறு வன்முறையில் இறங்கினால் போலீஸுக்கு சொல்லலாம். ஆனால், போலீஸுக்கு சொன்னால் "டொமஸ்ரிக் வயலன்ஸ்"ல் மனைவியை அடித்தது நீதான் என்று உன்னை ஜெயிலில் தள்ளி விடுவேன் என்று மனைவியே மிரட்டி மிரட்டி கைகளாலும் கால்களாலும் அடித்து நொறுக்கியிருக்கிறாள்.

புருஷன் ஊருக்கு புதுசு. அதோடு மனைவி இங்கிலாந்தில் பிறந்தவர். அவளுக்கு சட்ட திட்டங்கள் எல்லாம் தெரியும். ஊரில் மனைவியை அடி அடி என்று அடித்துவிட்டு இரவில் மனைவியோடு செக்ஸ் வைத்துக் கொண்டு ஏழெட்டு பிள்ளைகளை பெத்துக் கொண்டு வாழுகின்ற கணவன் மனைவி மாதிரி இங்கே மாறி நடக்கிறது.

கணவனுக்கு அடியும் போட்டுக் கொண்டு வெளியிலும் யாருக்கும் சொல்லக் கூடாது. என்னோடு படுக்கவும் வேண்டும் என்று மனைவிமார்களின் அடாவடித்தனம் தாங்க முடியவில்லை என்று கணவன்மார்கள் கதறுகிறார்கள்.

மனைவியின் கலாச்சாரம் மனநிலை பாகிஸ்தான் மனநிலைக்கு வித்தியாசமாக இருக்கிறது. ஆனால், முஸ்லிம்களா இப்படி என்று முஹமட் கேட்கிறார். அவரின் கேள்விக்கு பதில் சொல்ல யாரும் இல்லை.

மனைவியின் அண்ணன் மாப்பிள் ளைக்கு ஒரு ஃபக்றியில் வேலை தேடிக் கொடுத்தார். மிகவும் கஷ்டமான வேலை. ஆனால் உழைக்க வேண்டும். மனைவிக்கு சம்பளம் முழுக்க கொண்டு வந்து கொடுக்க வேண்டும். மனைவியை கண் கலங்காமல் அவளின் செலவு சித்தாயம் எல்லாம் பார்க்க வேண்டும். கோபம் வந்தால் மனைவியும் அடிப்பார். அண்ணனும் இடைக்கிடை அடிப்பார்.

அவர்கள் இருவருக்கும் பணம் தான் குறிக்கோள் என்கிறார் மொஹமட். மொஹமட்டுக்கு இன்னொரு பிரச்சனையும் இருக்கிறது. இவர்களை விட்டு விட்டு பாகிஸ்தானுக்கு ஓடிப் போனால் தங்களுடைய குடும்ப கௌரவம் பாதிக்கப்பட்டு விடும் என்பது அதுவாகும்.

யோக் செயாரில் இருக்கும் "பெனைன் டொமஸ்ரிக் வயலன்ஸ் குரூப்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற அமைப்பை பற்றி மொஹமட் கேள்விப்பட்டு அங்கு தொடர்பு கொண்டார். அவர்கள் இவருக்கு உதவ முன் வந்திருக்கின்றனர். மனைவியிடமிருந்தும் இந்த கொடும் வாழ்விலிருந்து பிரித்தெடுக்க முயற்சி செய்கின்றனர்.

"நேஷனல் மென்ஸ் அட்வைஸ் லைன்" தங்களுக்கு 2008 ஆம் ஆண்டு வந்த ரெலிபோன் கோல்களில் 946 கோல்கள் மனைவி அடிப்பதாக கணவன்மார் செய்த கோல்கள் என்றும் அதில் எல்லோருமே பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்றும் சொல்கிறார்கள். "இந்த மனைவி வன்முறை தொடர்பாக ஆண்கள் வெளியில் சொல்வதற்கு அவர்களின் கலாச்சாரம் ஒரு தடையாக இருக்கிறது" என்று சொல்கிறார் ஃபோன் லைன் கோடினேட்டர் இப்போ பென்டலிஸ் என்ற ஆங்கிலேயர்.

"பெண்கள் அடிக்கிறார்கள் என்று சொல்ல ஆசிய ஆண்கள் தயங்கிப் போகிறார்கள் மரியாதைக்காக" என்கிறார் சாசியா கையூம் என்ற புரோஜெக்ட் லீடர். பல ஆண்கள் இங்கு பிறந்த வளர்ந்த பெண் பிள்ளைகளை கலியாணம் முடித்து விட்டு அவர்களின் பழக்க வழக்கங்களோடு ஒத்துப் போக முடியாமலும் சொந்தங்களை உதற முடியாமலும் தடுமாறிப் போய் இருக்கின்றனர்.

அதில் சிலோனைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களும் இருக்கிறார்கள் என்பதும் ஆச்சரியமான விஷயமல்ல.

நல்ல குணமுள்ள மனைவிமார்கள் கிடைத்த என்னைப் போன்றவர்கள் பாக்கியவான்கள்தான் உண்மையாகவே.●

## சித்தாந்தன் கவிதை

# சொற்களுக்குள் ஒளிந்திருக்கும் மரணம்

ஒரு கத்தியிலோ
உடைந்த கண்ணாடித் துண்டுகளிலோ
சவரம் செய்து வீசிய பிளேட்டுகளிலோ
வெட்டியெறிந்த நகத்துண்டுகளிலோ
எல்லாவற்றிலும்
ஒட்டியிருக்கிறது மரணத்தின் நெடி

துவைத்துக் காயவிட்ட சட்டைப் பையினுள்
நனைந்திருந்த கடதாசித்துண்டில்
எவனோ ஒருவனின்
மரணம் பற்றிய வாக்குமூலம் எழுதப்பட்டிருந்தது

காலையில் புறப்பட்டு
மாலையில் என் பிணத்தை நானே காவியபடி
வீடு திரும்புகிறேன்

எதிர்பாராத யாரோ ஒருவனின் வெறித்த
பார்வையில்
நள்ளிரவு நாய்களின் குரைப்பில்
நிச்சயிக்க முடியாத் தருணத்தில்
ஏதோ ஒன்று உடைந்து சிதறுகையில்
உறக்கத்தில் யாரேனும் தட்டி எழுப்புகையில்
பலமுறையும்
நான் கொல்லப்பட்டு விடுகிறேன்

மரணங்கள் அச்சிடப்பட்ட பத்திரிகைகளில்
இரத்தத்தின் மணம் வீசுகிறது

எல்லோருடைய சொற்களுக்குள்ளும்
ஒளிந்துகிடக்கிறது மரணம்
எனது சொற்களில்
எனக்கான மரணம் சொருகப்பட்டிருக்கிறது

இப்போதும்
நான் படித்து மூடிவைத்த
புத்தகத்திலிருந்து
மரணத்தின் மொச்சை அடிக்கிறது!
(நன்றி:வார்ப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராமாயணம் தமிழ் மண்ணில் நிகழ்ந்ததே!



குமரிமுனையில் 133 அடி உயர வள்ளுவர் சிலை, ஓங்கி உயர்ந்து நிற்கிறதே.. அதை அமைத்தவர்!

சென்னையில் வள்ளுவர் கோட்டம்...

உலகில் எங்கெல்லாம் தமிழர்கள் நிறைந்து வாழ்கிறார்களோ அங்கெல்லாம் ஆலயங்கள் எழுப்பித் தந்த பெருமைக்குரியவர் சிற்பி பத்மபூஷன் டாக்டர் வை.கணபதி ஸ்தபதி. மாமல்லபுரம் சிற்பக்கல்லூரி முதல்வராக இருந்த இவருக்கு இப்போது வயது 82.

"மயன் பெருந்தச்சன் பரம்பரையில் வந்த மூத்த தமிழ்க்குடி எங்களுடையது. தஞ்சைப் பெரிய கோயிலை நிர்மாணித்த குஞ்சரமல்லன் ராஜராஜ பெருந்தச்சனின் வழிவந்தவர்கள் நாங்கள். நான் தஞ்சை கரந்தையைச் சேர்ந்தவன்" என்கிற இவர், காரைக்குடி அழகப்பா கல்லூரியில் கணிதமும், சமஸ்கிருதமும் படித்தவர். கூடவே தந்தை வழி சிற்பக் கலையும் இவரை சிறந்தவராக ஆக்கியிருக்கிறது. இப்போது இவரது வீட்டின் ஒரு பகுதியிலேயே 'வாஸ்து வேத ஆய்வு நிறுவனம்' ஒன்றை நிறுவி நடத்தி வருகிறார்.

"சம்ஸ்கிருதத்தை எல்லோரும் படிக்க வேண்டும். படிக்காமல் ஒதுக்குவது என்பது அறியாமையின் உச்ச நிலை. சம்ஸ்கிருதத்தில் இருக்கும் வார்த்தைகள் தமிழில் உண்டு. தமிழில் உள்ளவை சம்ஸ்கிருதத்திலும் உண்டு. ஆதியில் சம்ஸ்கிருதம் பேசியவன் தமிழன்! 50 அட்சரங்களாக இருந்த தமிழை, 30 அட்சரங்களாக ஆக்கியவன் மயன்! இந்த மயன்தான் தெற்கிலிருந்து வடக்கே சம்ஸ்கிருதத்தை கொண்டு சென்றவன். நமக்குச் சொந்தமான சம்ஸ்கிருதத்தை நம்முடையது என்று சொல்லக்கூட இன்று தைரியமில்லை... சம்ஸ்கிருதமும் தமிழும் ஒருதாய் வயிற்றில் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள்!" என்றார்.

வாஸ்து பற்றி பேச்சு வந்தது. "இன்று வாஸ்து பேசுகிறவர்கள் ஒரு பக்கத்தைப் பார்த்தவர்கள். முழுமையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாஸ்துவை படிக்காதவர்கள். இவர்களுக்கு சத்தியமாக 'வாஸ்து' என்பதற்கு பொருள்கூட தெரியாது! இவர்கள் பேசுவது அத்தனையும் அபத்தம்! 'வஸ்து'வில் இருந்து 'வாஸ்து' வந்தது! தமிழில் 'வத்து' என்பார்கள். இது தமிழக சித்தர் வழி இலக்கியம். வஸ்து மூலம் என்றால் வாஸ்துதான் கோலம்! கண்ணால் காணக்கூடியது மேட்டர், காண முடியாதது எனர்ஜி.

எங்கும் பரவி இருக்கும் எனர்ஜியை நான்கு சுவர்கள் எழுப்பி வாசல், ஜன்னல் வைத்து அடைக்கிறோம். வாஸ்துவை சரியாகப் புரிந்துகொள்ளாமல் கட்டடங்களை இடிப்பதில் பிரயோஜனமில்லை" என்று சீறுகிறார்.

தமிழகத்தில் சிறியதும் பெரியதுமாக 35,000 கோயில்கள் இருப்பதாகச் சொல்கிற இவர், "கல் எந்த நிறமாயினும், கல்லைத் தட்டினால் ஓசை வர வேண்டும். அதுவே சிற்பம் செய்யச் சிறந்தது.

சிற்பம் என்பது நுட்பம். நானோ டெக்னாலஜி என்று அன்றே இதற்குப் பெயர். சிற்பி என்பவன் ஒரு விஞ்ஞானி. ஸ்தாபனத்திற்குரியவன் ஸ்தபதி; தமிழில் பெருந்தச்சன் என்பதுவும் இதுவே".

கைவினைக் கலைஞர்கள் நல வாரிய உறுப்பினராக அரசு இவரை நியமித்துள்ளது. ஆனால், அதில் தன்னால் செயல்பட முடியவில்லை என்கிறார். சட்டமன்றததிலும், நாடாளுமன்ற மாநிலங்கள் அவையிலும் நியமன உறுப்பினர் பதவிகளை தங்கள் துறையினருக்குத் தர வேண்டும் என்கிறார்.

"மாமல்லபுரம் சிற்பக் கல்லூரி முதல்வராக இருந்தபோது எனக்கு சொற்பச் சம்பளம்தான். பூம்புகார், வள்ளுவர் கோட்டம், தஞ்சைப் பல்கலைக்கழகக் கலைக்கூடம் என இப்பணிக்கு இடையே



அத்தனையும் செய்து முடித்தேன். எனக்கு இதில் எந்த ஆதாயமும் இல்லை. எனவே, இதிலிருந்து ஒரு ராயல்டி தரக்கூடாதா என அரசைக் கேட்டேன்.. குமரிமுனை வள்ளுவர் சிலை வடிவத்தில் 23 லட்சம் கடைசியில் துண்டு விழுந்தது. அதனைப் போட்டு செய்து முடித்தேன். ஏழு வருடம் கழித்து மீண்டும் கலைஞர் ஆட்சிக்கு வருவதற்கு சில மாதங்களுக்கு முன்பே அதனை அரசு அதிகாரிகள் தந்தார்கள்" என்கின்றார்.

"இனி உங்கள் திட்டம்.." என்று கேட்டோம்.

"எனக்கு புத்திர வாரிசு கிடையாது. இப்போது மாமல்லபுரத்தில் என் சொந்த செலவில் மயன் கோயில் கட்டி வருகிறேன். கொஞ்சம் கொஞ்சமாக எனது சொத்துக்களை விற்று ஏறக்குறைய ஒன்றரை கோடி ரூபாய் செலவில் அது விரைவில் நிறைவடைய உள்ளது.

'மயன் என்று தமிழகத்தில் சொல்வதை, மெக்ஸிக்கோவில் 'மாயன்' என்கிறார்கள். அங்குள்ளவர்கள் செவ்விந்தியர்கள். நமது வாழ்க்கை முறை அவர்களிடம் இருக்கிறது. சிவன், கணபதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஞ்சநேயர் வழிபாடுகள் உள்ளது. இந்த இரு மண்ணையும் ஒருங்கிணைக்கும் விதமாக மாமல்லபுர மயன் கோயில் அமையும்.

'வைசம்பாயனம்' என்று ஒரு நூல் ஆதியில் வெளியாகி இருக்கிறது. அதில் மயனைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. முதலில் மனிதன் பிறந்தது குமரிக் கண்டம்தான். மயன் ஒரு சித்தன். வான சாஸ்திரமான சூரிய சித்தாந்தத்தை சம்ஸ்கிருதத்தில் அவனே எழுதி இருக்கிறான்.

'அயணம்' என்றால் பாதை; 'ராமாயணம்' என்பது ராமனின் பாதை. ராமாயண- மகாபாரதத்திலும் மயனைப் பற்றிய குறிப்பு உண்டு. வால்மீகி மயனை: பெரிதும் புகழ்கிறார்.

ராமாயணத்தில் ஆஞ்சநேயனை ஏன் குரங்கு மாதிரி சித்திரிக்கிறார்கள்? அவன் ரொம்பவும் முன்னவன்; அவன் பறக்கக் கூடிய ஆற்றில் உள்ளவன். அப்பேர்ப்பட்ட அனுமன் சம்ஸ்கிருதத்தில் பேசுகிறான்; ராவணன் தமிழில் பேசுகிறான். இரண்டும் ஒன்றாக இருந்ததாலேயே அவர்களால் அப்படிப் பேசிக்கொள்ள முடிந்தது.

ராவணன் தென் அமெரிக்காவைச் சேர்ந்தவன் என்று புது வரலாற்றுச் செய்தி ஒன்று இப்போது வந்து கொண்டிருக்கிறது. குமரிக் கண்டத்தில் கேரளாவை ஒட்டி இருந்தது தென் அமெரிக்கா! இப்போதும் தென் அமெரிக்கப் பெண்களைப் பார்த்தால் கேரளப் பெண்கள் மாதிரி இருப்பார்கள். இதையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்போது ராமாயணம் என்பது தமிழ் மண்ணில் நிகழ்ந்ததே!" என்கிறார் கணபதி ஸ்தபதி. குமரிக் கண்டத்திலிருந்து தமிழர்கள் ஆராய்ச்சியை தொடங்கி, தங்கள் வரலாற்றை நிறுவ வேண்டும் என ஆசைப்படுகிறார் இவர்.


**Select Estate & Lettings**

தரமான சேவை
லண்டன் முழுவதுமான
சிறந்த தரத்துடன்
வழங்குவதில்
முதன்மையான
நிறுவனம்!
வீடுகள் வாங்குவதற்கும்,
விற்பதற்கும்,
வாடகைக்கும்,
விடுவதற்கும்,
எடுப்பதற்கும் உங்கள்
வசதிக்கேற்ப சகல
தேவைகளையும் பூர்த்தி
செய்ய
காத்திருக்கிறார்கள்.

**Select Estate & Lettings**
**288 High Street,**
**Manor Park,**
**London**
**E12 6SA**
**phone:-2084701500**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*with best compliments from*

**YOGI RAMSURATH KUMAR PRINTERS**

12 GAJAPATHY STREET ICE HOUSE CHENNAI 600 005 PH 9444105396

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(FOR PRIVATE CIRCULATION ONLY)

# உள்ளே...

உதயகுமாரி
பரமலிங்கத்துடனான (நிலா)
சந்திப்பு

மரணித்த பாதங்கள்

வடமொழியில் தமிழ் சொற்கள்
கலக்காதது ஏன்?

மாறுகின்ற வன்முறை

அதே முட்கம்பிகள்
அதே பயங்கரம்

ராமாயணம் தமிழ் மண்ணில்
நிகழ்ந்ததே!



mullaiamuthan_03@hotmail.co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org